71

ஜகன் மோகினி

துன்முகி ஞு பங்குனி மீ 1—4—57 அனு நான்கு.

நக்ஷத்ர மண்டலம்

சந்தியா
பேசுகிறார்:

மலர் 34. இதழ் 4.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 - APR 1957
MADRAS

5-3-83
4
71
2-57

JL
ஜகன் மோகினி
157 · 34 . 4.
183207

ஜகன்மோகினி

ஐயுணர்வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து.
—வீரராகவ கவி

ஏப்ரல் 1957. மலர் 34, இதழ் 4. துன்முகி ஞூ பங்குனி மீ

பொருளடக்கம்

	பக்கம்
தேர்தல் தெரிவிக்கும் தெளிவுகள் —V.K. பார்த்தசாரதிஐயங்கார்	2
பகவத்கீதைக் குறிப்புகள் —ராஜாஜி	6
எங்களது இன்பச் செலவு —T. S. ராஜகோபாலன்	9
ஹிந்து சட்ட மாறுதல்கள் —P.M. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்	14
அலைமோதல் —வை.மு. பத்மினிஸ்ரீநிவாஸன்	19
நக்ஷத்ரமண்டலம் சந்தியா பேசுகிறுர் —சாரக்ராகி	23
விருந்தினரை உபசரித்தல் —வை. மு. விஜயலக்ஷ்மி	27
வை.மு. ஸ்ரீயின் தீபஸ்தம்பம் —வை.மு. விஜயலக்ஷ்மி	177-192
வாழ்க்கையில் ஒரு குறிப்பு —S. N. கிரிஜா	

(ராப்பர் 3-ம் பக்கம்)



வாசக அன்பர்களுக்கு, நமஸ்காரம்,

துன்முகி வருடம் மறைந்து ஹேவிளம்பி என்னும் புத்தாண்டு மலர்கிறது. அவ்வாண்டு நமக்கும், நம் நாட்டிற்கும், சுபீக்ஷத்தையும், சந்தோஷத்தையும் கொடுத்து பல நன்மைகள் செய்து வாழ்வில் ஒரு குறையும் வைக்காது காக்க வேண்டுமாய் இறைவனை ப்ரார்த்திக்கின்ரேும்.

அன்பார்ந்த வாசக நேயர்களே, தாங்கள் மோகினியை வரவேற்பதோடு, இப்புத்தாண்டில் தங்களது உறவினர்களையும், சினேகிதர்களையும் சந்தாதாரராகச் சேர்த்து மோகினியை ஆதரிக்குமாறு வெகு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிரேும்.

வை. மு. வி.

ஏப்ரல் 12உ முதல்
தமிழ் நாடெங்கும்
நடைபெறுகிறது.
விஜயாவின்
மாயா பஜார்
.... டைரக்ஷன்: K.V. ரெட்டி B.Sc.(HONS) = தயாரிப்பு: நாகிரெட்டி & சக்ரபாணி...
ஸ்டூடியோ: வாஹினி

தேர்தல் தெரிவிக்கும் தெளிவுகள்

ஸ்ரீ. வி. கே. பார்த்தசாரதி அய்யங்கார் பி.ஏ., பி.எல்.

தேர்தல் முடிவுகள்

	மொத்தம்		கா.		கம்யூ.		பிஎஸ்பி		தனி		இதரர்	
	லோக சபை.	அசெம்ளி	லோ	அ	லோ	அ	லோ	அ	லோ	அ	லோ	அ
ஆந்திரா :	43	301	37	215	4	35	0	2	0	11	2	36
கேரளா :	18	126	6	43	9	60	1	9	0	6	1	8
சென்னை :	41	205	31	151	2	4	0	2	3	15	6	33
மைசூர் :	26	208	23	150	0	1	1	18	1	35	1	4
ஒரிஸ்ஸா :	20	140	7	56	2	9	3	11	2	7	6	58

கேரளா : லோக்சபை, அஸெம்ப்ளி இதரர் 9-ம் முஸ்லீம்லீக.

சென்னை : இதரரில் : **அஸெம்ப்ளியில் :** காங்கிரஸ் ரிபார்ம் கமிட்டி 14 : ஸோஷலிஸ்ட் 2; பார்வர்ட்பிளாக் 2; தி மு க : 15;

லோக் சபையில் : கா. ரி. க.; பார்வர்ட்ப்ளாக் 1; தி மு க 1; ஸோஷலிஸ்ட் 1;

தேர்தல் முடிவுகள் ஒரு விஷயம் தெளிவாக வற்புறுத்தியுள்ளன. காங்கிரஸ் கட்சியாரது வெற்றி, வெகு சிரமப்பட்டுக் கவலை கொண்டே பெறப்பட்டுள்ளது. வெற்றி, கட்சிக்கே யொழிய, கட்சியைச் சேர்ந்ததாக நின்றவர்களுக்கல்ல. மக்கள் மனம் காங்கிரஸ் கட்சியிடையேயும் நம்பிக்கை நிலை குலைந்து தடுமாறி வருகிறது. இந்நிலை நீடிக்குமாகில், வாக்காளர்களுக்குக் கட்சியாரிடை தோன்றியுள்ள சந்தேக நிலை, கட்சியிடையும் நிலைத்தே விடும். அந்நிலை நேருமாகில், காங்கிரஸ் கட்சியே மறக்கப்பட்டு, கொள்கையற்ற இதர கட்சிகளும், தலைவர்களும் தலைவிரித்தாடி, உள்நாட்டுக் கலகமும் சச்சரவும் ஓங்கிப் பரவி, இந்தியச் சுதந்திரமே அவமதிப்பிற்காளாக வேண்டியே இருக்கும். இந்தக் கசப்பான வருங்கால நிலையை, இனி, ஒளித்தோ, வேறுவிதப் பகட்டாகவோ பேசிப் பயனில்லை. சுதந்திரம் சுயமாத்திரையாயிருப்பது விட்டு, சுயநலவாதிகளால் கசப்பு மாத்திரையாக்கிச் சர்க்கரைப் பூச்சுக் கொண்டு மக்களிடை ஊட்டப்பட்டிருந்தது. சர்க்கரைப் பூச்செல்லாம் சுயநலம் தேடும் எறும்புகளால் அரித்துத் தின்னப்பட்டதாகிவிட்டது. க்யாதிலாப அபேக்ஷிதர்கள் தயாரித்த கசப்பு பாகம் இப்பொழுது வெளிவந்துவிட்டது. இது உண்மையான சுதந்திரக் காங்கிரஸ் ஔடதமல்லவென்பதும், போலி மருந்தே யென்பதும், இனியாவது காந்தி மகான் தயாரித்துக் கொடுத்த உண்மைச் சுதந்திர லோக சேவையென்ற காங்கிரஸ் ஔடதத்தை தயாரித்துத் தரவல்ல உண்மை தேசியத் தொண்டர்களையே நாம்

தேடிப் பாராளுமன்றத்திற்கு வேண்டியனுப்ப வேண்டுமென்பதுமே இந்தத் தேர்தல் நமக்குத் தெளிவுறுத்தும் பாடமாகும்.

கேரளாவில் கம்யூனிஸ்ட்டுகள் ஆதிக்கம் எப்படியிருக்கப்போகிறதோ என்ற கவலையே இதர மாகாண காங்கிரஸ் கட்சியாளர்கள் கவலையாயுள்ளது. ஒரிஸ்ஸா நிலை ஒன்றும் கூறக் கூடாததாயிருந்து வருகிறது. காங்கிரஸ் பலம் இங்கு நிலை தடுமாறியுள்ளது.

சென்னையில் மந்திரிசபை ஸ்தாபனம்தான் இச்சமயம் யாவர் கருத்தையும் கொள்ளை கொண்டுள்ளது. எவ்வளவு பெயர், இதர கட்சியார் எந்த விதத்தில் சேர்க்கப்படுவது? மத்திய சபையில் மந்திரி சபை ஸ்தாபனம், மக்கள் நலம் நாடும் தலைவர்களையே கொள்ளல் அவசியம். சென்னை மந்திரி சபையில் காங்கிரஸ் கட்சியைச் சுயநலம் கோரியே தொற்றி நின்று, பலவகை அவதூறுகளுக்குக் கட்சியையும், தம்மையும் ஆளாக்கி, தலை பிழைத்தது தம்பிரான் புண்ணியமென்ற வெற்றி பெற்றோர் அகற்றப்படுவதே வருங்கால தேசநலன்.

எது எப்படியாயினும், வருங்கால மந்திரிகளாவது உண்மைக் காந்தீயக் கொள்கைகளைக் கொண்டு, சுயநல மற்ற தேசியத் தொண்டர்களாகி, மக்கட் சேவையில் ஈடுபடுவாராக.

பதவியேற்கும் அதிகாரிகள், முக்கியமாக, உடனுக்குடனேயே செய்யவேண்டிய அவசியமான காரியங்கள் சிலவுள:

வார விடுமுறை நாட்களை; ஞாயிறிலிருந்து வெள்ளிக்கு மாற்றுவது மிக அவசியம். இந்த மாறுதல் ஏற்பட்டக்காலே அன்னியர் ஆசார மோக மனப்பான்மை மறந்து, சுதேச தேசிய மனப்பான்மை இந்தியரிடை வளர்வதற்கு இடமேற்படும்.

அடுத்தபடியாக உடை விஷயத்தில், மேனாட்டு நாகரீக உடையணிதல் நிராகரிக்கப்பட்டு, அவரவர் தேசிய நாட்டு உடையணி வகையே அமுலுக்குக் கொண்டு வரப்பட வேண்டும். இதுவும் மேனாட்டு மோகம் மறைவுக்கு உதவுவதோடு, நம் நாட்டு சீதோஷ்ண நிலைக்கேற்ற உடை உதவி, தேகநலன் பெருகிடப் பெரிதும் உதவும் வகையாம். இந்த உடை தரிப்பு திட்டத்தால், வீண் சிகையலங்கார மோகமும் தானாகவே சிரமமின்றி மறைந்திடும்.

மூன்றாவதாக, விஞ்ஞானம் என்ற பெயரால் ஹிந்து மதப் புராணங்களைத் தூஷித்து அகற்றிட எழுந்து வரும் மித்திரபேத பிரசாரத்தை அரசாங்கம் தயா தாக்ஷண்யமின்றி அடக்கியொடுக்கி அகற்றிட முன்வருவது அவ

சியம். மேனாட்டார், தமது சுய நலனுக்காக நம்மிடைப் புகுத்தியுள்ள இந்தச் சுயமத அவமதிப்பு அகற்றப்பட்டக் காலே நம் நாட்டில் சமதர்ம சமூக ஸ்தாபனத்திற்கு வழி கோலப் படுவதாகும். புராதனங்களை அடிப்படையாக அமைத்து, அதனைத் தற்கால சமூக அமைப்பிற்கேற்ப வளர்த்து, ஆதரித்துப் பெருக்கிப் பெருமை கொள்வதே இந்தியச் சுதந்திரம் உண்மைச் சுதந்திரமாகும் வகை. அதுவரை, நாம் பாராட்டும் சுதந்திரம், என்றாவது திடீரென அழிந்து மறையவல்ல போலிச் சுதந்திரமே.

இதற்கெல்லாம் அநுகுணமாக, முதலில், நாஸ்திக மனப்பான்மை யொழிந்து, அரசியல் முதல் மக்கள் முழுவதாக ஈச்வர பக்தி பரவவேண்டும். அரசாங்கம் மதப்பற்றற்றதென்ற அர்த்தமற்ற, விபரீதார்த்தம் கொடுத்து, தீவினைகளில் அதிகாரம் செலுத்தத் தூண்டி வரும் அரசியல் மேற்கோள், முதன் முதலில் கைவிடப்படவேண்டும். மத விஷயங்களில் அரசாங்கம் எவ்விதத்திலும் பிரவேசித்திடலாகாது. ஹிந்து மதச் சம்பந்தமாகச் செய்துள்ள அநீதசட்டங்களெல்லாம் ரத்து செய்யப்படவேண்டும். பெண்களுக்குச் சொத்துரிமை சட்டம் வந்ததும், வரதக்ஷிணைப் பேய் மறையவில்லை. கன்னியாப் பெண்களது பெற்றோரின் பெருங் கவலை போனபாடில்லை. வரதக்ஷிணை எந்த விதத்திலாவது வசூலிக்கப் படுவது குற்றமேயென்ற சட்டமும், அதற்கான தண்டனையும் விதிக்கப்படுவதுமே உண்மைச் சமூக சீர்திருத்தமாகும். ஹிந்து சமூகம் மேன்மைபெறும் வழியாகும். இஷ்ட தேவதா பூஜை இஷ்டப்படி நடந்தேற வீடப்படவேண்டும்.

இரண்டாவதாக, பள்ளிக்கூடங்களில் தெய்வ பக்தி புகட்டவல்ல வகுப்புக்கள் நடந்தேறி, பாட புத்தகங்களில் ஈசுவர ஞானந் தரவல்ல பாடம் முதற் பாடமாயமைய வேண்டும்.

எல்லா மதத்திய தத்துவங்களின் அடிப்படையும் ஒரே தெய்வத்தைக் குறிப்பிட்டழைத்துப் போகும் பல்வேறு பாதைகளென்ற வகுப்புவாத, சமயபேத, மதத் துவேஷ மற்ற மனப்பான்மை, குழந்தைகள் பள்ளி முதல், உயர் நிலைப்பள்ளியிலும், கல்லூரிகளிலும், உபாத்திமார் பயிற்சி ஸ்தாபனங்களிலுமாக எல்லாக் கலாசாலைகளிலும் போதித்து வளர்க்கப்பட்டு வந்தக்காலே, அவரவர் தத்தம் மத சமய ஆசாரங்களில் பற்றுக்கொண்டு அனுஷ்டிப்பவ

ராகி, இதர சமயத்தினரையும் மதித்து மரியாதையுடன் சகோதரர்களாக பாவித்திடும் நிலே, இந்திய சமூகத்தில் நிலவுவதாகும். அப்படிக்கின்றேல், சமதர்ம சமூகமென் பது பேச்சளவேயாகி, காரியத்தில் கலகங்களெழும்பிச் சங்கடங்கள் விளைவிக்கும் அரசியல் சுயநலக் கருவியே யாகும்.

அடுத்தபடியாக, விவசாயமும், கால்நடை வளர்ப்பும் வனங்களது பாதுகாப்பும் கவனிக்கப்படவேண்டும். வனங் களின்றி, மாத மும்மாறி எதிர்பார்க்கப்படமாட்டாது. நெல் விளைச்சலும் பால் கறவையுமின்றி மக்கள் திடகாத் திரத்துடனும், மன அமைதியுடனும் வாழ்வதரிது.

இப்படிக்காக ஆத்ம பலத்தையும், சரீர பலத்தையும் நிலைப்படுத்திக்கொண்டு, அதிகார வர்க்கம், வகுப்புவாத வழிகளை அரசியலில் அணுகாது, விலக்கி; சமூகத்தாரிடை யிருந்து வரும் சமய பேதங்களை வெறுத்துத் துவேஷித்துப் பிளவு பெருக்காது, அபிமானித்து, ஆதரித்து, ஆத்ம வழி இழுக்கும் காந்தம் போல் உதவிவரவேண்டும். அதிகாரப் பதவிகளுக்கு, உண்மைத் திறனே யோக்கியதாம்சமாகக் கொள்ளப்படவேண்டுமே யொழிய, ஜாதிபேத வகுப்பா சார விகித முறைகள் கையாளப்படலாகாது.

இந்த முக்கியாம்சங்கள் கவனிக்கப்படாது போமா கில், இதர கட்சிகள் மலிந்து, காங்கிரஸ் கட்சி மெலிந்து, சுதந்திர இந்தியாவில் உள் நாட்டுப் பிளவுகள் எழுந்து, மக்கள் சுகம் என்றுங் கிட்டப்படாததாகி சிதைந்திடுவது திண்ணமே. பெற்ற சுதந்திரம்; சுயநலவாதிகட்கு இரையாகி, சீக்கிரமே சிதைந்து மறைவதுமாகலாம். வாதம் ஒழிந்து, வேதம் வளர்ந்திட, தேர்தல் பெற்றவர் தெளிவுறுவாராக. அடுத்த தேர்தலில் வீண் அபேட்சை யும், மனக் கொதிப்பும், பணச் செலவும், பரஸ்பர தூஷண மும், பல கட்சிப் பரவுதலும் மறைந்து, உண்மைத் தேசியத் தொண்டர்களை, மக்கள் தாமாகப் போய், நாடிப் பதவி வகித்திட வேண்டிடும் நிலைமை வந்திடவும், வெற்றி பெற்ற காங்கிரசும், அரசாங்க எதிர்ப்பு பாக்கியம் பெற்ற இதர ரும், இந்திய சமூக மக்களும் மனம் ஒன்றுபட்டு, ஒத் துழைத்து காரியசித்தி பெறவும், இந்தியத் தாய் ஆசி கூறி, யாவற்று மதத்தினற்கும் பொதுவான அக் காணக்கூடாத தோர் ஒற்றைக் கடவுள் அருள் புரிவாராக !—

சர்வேஜனு சுகினே பவந்து.

பகவத்கீதை குறிப்புகள்

ஸ்ரீராஜாஜி

பன்னிரண்டாம் அத்தியாயம்.

சுலோகம் : 1-5

'சௌம்யமான மானுஷ வடிவத்தில் என்னை உபாசி' என்று கண்ணன் மறுபடியும் உபதேசிக்கிறான். அவ்யக்த அருவத்திலாவது விசுவ ரூபமாகவாவது பகவானைத் தியானித்துப் பலன் அடைவது மிகக் கஷ்டம். அப்படித் தியானிக்கும் சக்தியைப் படைத்துத் தியானித்து உபாசித்தால் நலமே. ஆனால் அது கஷ்டம். என்னை ஏதாவது சௌம்ய வடிவத்தில் உபாசித்தல் சுலபம். அதனால் எல்லாப் பயனையும் அடையலாம். "எந்த வழியிலும் இந்திரிய நிக்ரஹம் வேண்டும். எந்த வழியிலும் என்னைத்தான் அடைய வேண்டும். ஆனபடியால் எளிதான முறையைக் கைக்கொள்வதே உசிதம்" என்கிறான் கீதாசாரியன், முதல் ஐந்து சுலோகங்களில்.

சுலோகம் : 6-8

எல்லாக் காரியங்களையும் எனக்கு அர்ப்பணமாகச் செய்து என்னை உபாசிப்பதே நல்ல எளிதான முறை. அப்படிச் செய்தால் மக்கள் என்னை நிச்சயமாக அடைவார்கள்.

சுலோகம் : 8-12

ஆனால் அவ்வாறு மனத்தை ஸ்திரப்படுத்தித் தன்பால் செலுத்த முடியாதவர்களுக்குக் கீதாசாரியன் சொல்லுகிறான் :

விடாமுயற்சியுடன் அப்பியாசம் செய்தால் முடியும். இப்படிச் செய்வதற்குத் தகுந்த மனோபலம் இல்லாமற் போனால் உள்ளத்தைச் சுத்தமாக வைத்துக்கொண்டு, பயனுக்கு ஆசைப்படாமல் கடமைகளைச் செய்துகொண்டு போகலாம். அதிலிருந்து சாந்தி ஏற்பட்டு, பக்தி உபாசனை செய்யும் சக்தி வரும்.

சுலோகம் : 13-20

என்னை உபாசிக்கிறவர்களுக்கு நான் அன்பன். அவர்களுக்கு எல்லாம் செய்வேன். அவர்களுக்கு இன்ப துன்பங்களைச் சம சித்தத்துடன் பொறுக்கும் சக்தி தருவேன். அவர்கள் யாரையும் துவேஷிக்க மாட்டார்கள். எதனாலும் மனக்கலக்கம் அடையமாட்டார்கள். பக்தர்கள் எனக்கு மிகப் பிரியமானவர்கள். அவர்களுக்கு நான் எல்

ஸாச் சக்தியும் சாந்தியும் தருவேன். இவ்வாறு கண்ண பிரான் உறுதிகூறிப் பன்னிரண்டாவது அத்தியாயத்தை முடிக்கிறான்.

இதைப் படித்து உபாசகர்கள் தைரியம் அடைவோமாக!

இனி உபதேசத்தின் மூன்றும் பாகம் என்று பெரியோர்களால் பிரிக்கப்பட்ட ஆறு அத்தியாயங்கள்.

கணவன்:— அடிப்பாவி! குழம்பிலே தேளுடி.....

மனைவி:— செத்துபோன தேளுகிட்டே என்னபயம். கொட்டுமா?... பேசாம சாப்பிடுங்கோ.



பெண்:— டேய்! அம்மா இளைக்கிறத்துக்காக வண்டியிழுக்கிறு பாரு.

பையன்:— அம்மா. இந்த வண்டி வேண்டாம். ரிக்ஷா வண்டி இழு. அப்போதான் உடம்பு இளைக்கும் ஹி...ஹி...

எங்களது இன்பச் செலவு

ஸ்ரீமான். டி. எஸ். ராஜகோபாலன், பி. ஏ., எல். டி.,

ஆசிரியர், ஹிந்து உயர்நிலைப் பள்ளி, திருவல்லிக்கேணி.

4. சோமநாதபுரம்

பிரயாஸ் பட்டணத்தின் மேற்கில் கடற்கரையிலேயே அமைந்துள்ளது, சோமநாதபுரத்தின் ஆலயம். இது அண்மையில் சர்தார் வல்லபாய் பட்டேலின் பெருமுயற்சியால் புதுப்பிக்கப் பெற்று, கட்டிட வேலை இன்றும் நிகழ்ந்து வருகின்றது. நீலக் கடலின் அருகே நித்திலக் குவியல் போன்ற பெருங் கோபுரம், வெகு தூரத்திலிருந்தே நம் கண்ணையும் உள்ளத்தையும் ஒருங்கே கவர்கின்றது. 12 மணிக்குமேல் கோயில் கதவு மூடப்பெறும் என்று கேட்டு, நாங்கள் திரிவேணித் துறையிலிருந்து விரைந்தோம்; ஆலயத்தின் கதவு மூடப்படுவதற்கு முன்னமேயே எங்களுக்குக் காட்சியளித்தார், கருணைவள்ளல்.

சோமநாதபுரம் என்று நினைக்கும்போதே நம் நாட்டின் பண்டைப் பெருமையும், நம் முன்னோர்களது அரிய பக்தியும் நாகரீகமும், மதவெறியர்களது துவேஷ புத்தியும் நாச வேலையும், உலகங்களை ஆக்கி, அளித்து, அழிக்கும் இறைவனும் ஞாலத்தில் மக்கள் தனது திருவுருவை ஆக்கி ஆவன செய்யவும் வெறியர் அழிக்கவும் அறிந்தும் அறியாதவன் போல் மன்னும் நிலையும், கொடுங் கலியிலும் இறைவன் மாந்தரது உள்ளத்தில் உறைந்து நன்னெறி பரவுவதற்கு வேண்டுவன செய்யத் தூண்டும் அருங் குணமும் மாறி மாறித் தோன்றுகின்றன. சோமநாதர் ஆலயம் 50 நூற்றாண்டுகளுக்குமுன் தோன்றியிருக்க வேண்டுமென்பது, புராணம் வல்லோர்களது துணிபு. இங்குள்ள சோமநாதர் ஐயாயிரம் ஆண்டுகளுக்குமுன் சிந்துநதிப் பள்ளத்தாக்கில் வணங்கப் பெற்றார் என்று சரித்திர ஆராய்ச்சியாளரும் கூறுகின்றனர்.

இங்குள்ள சோமநாத மூர்த்தியைப் பற்றிய புராண வரலாறு, பின்வருமாறு: முன்பு தக்ஷனுடைய பெண்களாகிய இருபத்தேழு நக்ஷத்திரங்களையும் மணந்துகொண்ட சந்திரன், அவர்களுள் அதிக அழகு வாய்ந்த ரோகிணியிடம் அதிக ஆதரத்தைக் காட்டினன். இது கண்டு பொறுதமற்றப் பெண்கள் தங்களது தகப்பனிடம் முறையிட்டுக் கொண்டனர். மனைவிமார் யாவருடனும் பக்ஷபாதமில்லாமல் பழகவேண்டும் என்று தக்ஷன் வற்புறுத்தியும், சந்திரன் இதைச் செவி யேற்காததால், தக்ஷன் சினங்

கொண்டு, "நீ நாளுக்கு நாள் குறைவாயாக' என்று சபித்தான். உடனே சந்திரனது உடல் மெலியலாயிற்று. அவன் வேள்விகள் பல செய்தும், தன்னைச் சாபத்தினின்றும் காப்பாற்றிக்கொள்ள இயலவில்லை. சந்திரன் நாளுக்கு நாள் குறைந்து வரவே, மரங்கள் புல் பூண்டுகள்-இவை வளரவில்லை. வானிடை வாழுந் தேவர்கள் தக்ஷனிடம் சென்று சாபத்தைப் போக்கும்படி வேண்டிக் கொண்டனர். தக்ஷனும், முதலில் சந்திரன் தனது பத்தினிகளிடம் சமமாகப் பழகவேண்டும் என்றும், பின்பு பிரபாஸ் தீர்த்தத்தில் கடலில் நீராடி ஆங்குள்ள மஹாதேவனை அடிபணிய வேண்டுமென்றும், அவ்வாறு செய்தால் அவன் ஒவ்வொரு மாதமும் முதல் பகுதியில் தேய்ந்து பின் பகுதியில் வளர்ந்து வருவான் என்றும் வரம் அளித்தான். பெண்பாலரது மனதை புண்படுத்துவது மிகக் கொடிய பாவமாகுமென்றும் தக்ஷன் சந்திரனுக்கு உபதேசம் செய்தான். சந்திரனும் ரோகிணி தேவியுடன் இந்த இடத்திற்கு வந்து, கோழிமுட்டை வடிவங்கொண்ட ஸ்பர்ச லிங்கத்தை வழிபட்டு நாலாயிரம் ஆண்டு தவஞ் செய்தான். தக்ஷனது வரத்தின்படியே சந்திரனது நோய் நீங்கிற்று. சந்திரன் இந்த இடத்தில் தனது ஒளியை மீண்டும் பெற்றது குறித்து, இந்த இடம் பிரபாஸம் என்று வழங்கப் படுகின்றது. சோமன் என்பது சந்திரனுக்கு வேறு பெயர்; சந்திரனது துயரைப் போக்கிய இந்த மூர்த்திக்குச் சோமநாதன் என்றும், இந்த மூர்த்தி உறையும் திருப்பதிக்குச் சோமநாதபுரம் என்றும் பெயர்கள் வழங்கலாயின. பிரமதேவனே இங்கு ஒரு கோயில் அமைக்கும்படி சந்திரனை ஏவியதாகப் புராணம் கூறும். பிரமன் பாறைப் பிளந்தான்; ஸ்வயம்பூ-ஸ்பர்ச லிங்கம் (மாந்தரால் ஆக்கப் பெறுமல் தானே தோன்றிய லிங்கம்) வெளி வந்தது; அதன் மேல் தருப்பைப் புல்லும் தேனும் படிந்திருந்தன. கந்த புராணத்தில் பிரபாஸ காண்டத்தில் 82, 83-வது சுலோகங்கள், "ஸ்வயம்பூ லிங்கமாகிய இறைவர், சக்தி வாய்ந்தவர், சூரிய வட்டம்போல் ஒளிமிக்கவர்; மூர்த்தியைச் சுற்றி நாகம் வளைந்து கொண்டுள்ளது; மூர்த்தியின் பெயர் ஸ்பர்ச லிங்கம்; மூர்த்தி தரையின் கீழே உள்ளார்" என்று விவரிக்கின்றன.

இந்தத் தலம், இந்திரனும் சூரியனும் மிகவும் விரும்பியதென்றும், இங்குக் கடலில் நீராடினல் பாவங்கள் நீங்கி முக்தி பெறலாம் என்றும் கருதப்பெற்று வருவதால் தொன்றுதொட்டே மாந்தர் இங்கு யாத்திரையாக வருவது வழக்கம். பாண்டவர் இங்கு வந்து தங்கித் தவம் இயற்றினர்; கண்ணனும் பலராமனும் இங்கு நீராட வந்திருந்தனர். துவாரகைக்குப் போகும்போது அர்ஜுனன்

இங்கு இறைவனை வழிபட்டான். பின்னர் ஜனமேஜயர் முதலியோர் யாத்திரையாக இங்கு வந்தனர்.

கி. பி. 8-வது நூற்றாண்டுக்குள் இந்த ஆலயம் இரண்டு முறை கட்டப்பெற்றது என்று சரித்திரம் கூறுகின்றது. அருகிலுள்ள குறுநில மன்னர்களது குலதெய்வமாக விளங்கினார், சோமநாதர். கி. பி. 750 முதல் 950 வரையில் சௌராஷ்டிரத்தை ஆண்டுவந்த சாளுக்கிய வமிசத்தாரின் ஒரு பிரிவு, இந்த ஆலயத்தை நன்கு பராமரித்து வந்தனர். கி. பி. 1026-ம் ஆண்டு ஜனவரி 6-ஆம் நாள் கஜினி மாமூது சோமநாதபுரக் கோட்டையை முற்றுகையிட்டான். கோட்டையைக் காத்த மாவீரர்கள் ஊக்கங் குன்றாமல் வாளேந்திப் போர் செய்தனர். துருக்கர் படை உள்ளே நுழைந்தது; சௌராஷ்டிரப் போர் வீரர், படையைத் தகர்த்து முறியச் செய்தனர். பின்னர் இரண்டு நாட்கள் கழித்து நிகழ்ந்த கடும்போரில் ஐம்பதாயிரம் வீரர் உயிர் நீத்தனர். அசூயையும் பொறாமையும் மதவெறியுங் கொண்ட அந்நியன், புனிதத் தலத்தினுள் நுழைந்து அடாது செய்ததை நாம் சரித்திரங்களில் படிக்கிறோம். இவன் அழித்தது, மூன்றாவது தரம் நிருமிக்கப் பெற்ற ஆலயமாகும். இந்த ஆலயம் சிவப்புப் பாறைக் கற்களால் ஆனது.

கி. பி. 1075-ம் ஆண்டிற்குள் இந்த ஆலயம் மறுபடி புதுப்பிக்கப் பெற்றிருக்க வேண்டும். இக் காலத்தில் இந்தியாவுக்கு வந்த அராபிய யாத்ரீகர்கள், இந்த ஆலயத்தின் மேன்மையையும், இதில் கொண்டுள்ள மூர்த்தியின் மேன்மையையும் பரக்கக் கூறியுள்ளனர். ஸயின்-உல்-அக்பர் (Zain-ul-Akhbar) என்பவர், "இந்து ஸ்தானத்தில் கடற்கரையோரத்தில் சோம்நாத் என்ற பெரிய புரமொன்றுள்ளது; முகம்மதியருக்கு மெக்காவைப்போல், இது இந்துக்களுக்குப் புனிதமான தலமாகும்" என்று எழுதியிருக்கிறார்.

கி. பி. 1114-ம் ஆண்டில் பாவ ப்ரஹஸ்பதி என்ற அர்ச்சகர், குமாரபாலர் என்ற மன்னரை அணுகிக் கோயிலைச் சீர் செய்யுமாறு வேண்டிக்கொண்டார். மன்னரும் இசைந்து, மேரு ப்ராஸாதம் (மேருவைப் போன்ற அரண்மனை) என்ற பெயர் கொண்ட கோபுரத்தைக் கட்டினார். ஆலயத்தின் வடக்கிலும் தெற்கிலும் திண்ணிய மதில் சுவர்களை அமைத்து, கோபுரத்தின் தூபிகளில் பொற் கலசங்களும் பொருத்தினார். கௌரி, பீமேச்வரர், சித்தேச்வரர் முதலியோருக்கும் சிறிய ஆலயங்களைக் கட்டி, மன்னர்கள் கூடி இறைவனை வழிபடுவதற்குப் பெரியதொரு மண்டபத்தையும் நிர்மாணம் செய்தார். தெள்ளிய நீர் தேங்குவதற்குப் பெரியதொரு தேக்கத்தையும் அமைத்து, அதன் நடுவில்

உற்சவ காலங்களில் மூர்த்தி அமருவதற்குத் தவளே வடிவத்தில் அணியாசனமும் கட்டிவைத்தார். பாபமோசனரது ஆலயமும், சண்டிகையின் ஆலயமும், இவர் கட்டிய ஏனைய ஆலயங்களுள் முக்கியமானவையாகும். வேதம் வல்லோர்கள் வசிப்பதற்கு வீடுகளும் கட்டப்பெற்று, ஆலயங்களில் நித்திய நைமித்திக பூஜை முதலியன வழுவின்றி நிகழ்ந்து வந்தன.

அல்லாவுத்தீன் கில்ஜி கி. பி. 1296-ல் அரியணை ஏறினன். அவன் சூரத்திற்குச் சென்று நகரைச் சூரையாடி சௌராஷ்டிரத்தில் நுழைந்து ஆங்குள்ள பட்டிணங்களே அழித்துப் பிரபாஸம் சேர்ந்தான். ராஜபுத்திர மாவீரர் பெரும் படைகளைத் திரட்டித் தங்களுக்குக் கண்மணி போன்ற ஆலயத்தைக் காப்பாற்றப் பெரும்பாடு பட்டனர். ஆலயத்தை மதவெறியரது கொடுஞ் செயலிலிருந்து காப்பது, அன்றேல் இறப்பது என்று சபதஞ்செய்து, வீரர்கள் யாவரும் ஆண்டவனது முன்னிலேயில் நீராடித் தூய உடை அணிந்துத் திருநீறு பூசிச் சண்டைக்குச் சென்றனர். ஆலயம் பகைவரது கையுட் புகுந்தது. அலாப் கான் (Alaf Khan) என்பான் ஆலயத்தின் கதவுகளே உடைத்து, உள்ளே சென்று, லிங்கத்தைத் தாக்கித் துண்டங்களை வெற்றிச் சின்னமாக எடுத்துச் சென்றான் டில்லிக்கு.

இவ்வாறு ஐந்தாவது முறை தோன்றி அழிந்த ஆலயத்தைப் புதுப்பித்தான், ஜூநகாத்து மன்னனாகிய மஹீபாலன். இவனது புதல்வனாகிய கெங்கர் (Khengar) என்பான் வேறொரு மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்தான். இம்மூர்த்தி மீண்டும் மகமது பேக்டா என்பவனால் இங்கிருந்து பெயர்க்கப்பட்டது; ஆலயம் மசூதியாகவும் மாறியது. எனினும் ஆலயம் மசூதியாகப் பயன்படவில்லை. பின்னர் மக்கள் ஆலயத்தின் அஸ்திவாரத்தைச் சிறிது எழுப்பினர். கி. பி. 1783-ல் இந்தூர் ராணியாகிய அகலியா பாய், பழைய கோயிலுக்கருகில் சோமநாதருக்குச் சிறியதொரு கோயிலைக் கட்டி, மூர்த்தியை நிலவறையில் பிரதிஷ்டை செய்வித்தாள். 1811-ம் ஆண்டில் சோமநாதபுரத்து ஆலயத்தின் நிர்வாகம், பரோடா மன்னரிடம் (கயிக்வார்) சேர்ந்தது. 1813-ம் ஆண்டில் கத்தியவார் ஆங்கிலேயரது வசமாயிற்று; அதுமுதல் ஆலயம் நன்கு பராமரிக்கப்பெற்று வருகிறது. ஸர்தார் பட்டேலின் அருமுயற்சியால் இந்த ஆலயத் திருபணி 1947-ம் ஆண்டு நவம்பர் 12-ம் தேதி துவக்கப்பெற்று, 1951-ம் ஆண்டு மே மாதம் 11-ம் தேதியன்று லிங்கப் பிரதிஷ்டை நிகழ்ந்தது. சந்திரனுடைய ஒளி தேய்வதும் வளர்வதும் போல், அவனது துயரை நீக்கிய இறைவனது உறைவிடமாகிய இக்கோயிலும் தேய்ந்தும் ஓங்கியும் வந்துள்ளது. ஆலயத்தை அழித்துக் களித்த வெறியரும்

மாண்டனர். அவர்கள் அடாது செய்து குவித்த நிதியும் ஆண்ட பகுதிகளும் குலைந்தன; ஆலயத்தை அவ்வப்போது புதுப்பித்து பக்தி மார்க்கத்தை நிலைநாட்டிய பெருமக்களும் மாண்டனர்; எனினும் இம்மேன்மகக்களது பெயரும் பெரும் புகழும், அழியா இறைவனைப்போல் என்றென்றும் ஓங்கிக் கொண்டே யிருக்கும்.

உத்தம கன்னியர் ஒன்பதின் மூவர்
சித்தங் கவர்ந்த சீதக் கிரணன்
உறுபெருஞ் சாபம் தவிர்தகை உத்தமன்
இருஞ்சடை இறைவன் சோம நாதன்,
இந்திரன் ஆதவன் என்றிவர் அடிதொழ,
மந்திர நாவினர் முனிவரர் பணிசெய,
வரைபுரை திரைபொரு வளர்புனல் ஓதக்
கரைமிசைக் கவினுறு நித்திலத் தொத்தெனத்
திகழ்பெருஞ் சோதி ஆலயந் தன்னுள்
புகழுடை வேதியர் பரிவுடன் போற்ற
அழலுமிழ் பாந்தள் அணைசெய
அழலொளி மேனியன் அமர்ந்தனன் ஆங்கே.

கோயிலுக்குள்ளே சோமநாதரை வழிபட்டு வெளியே வந்தோம், நாங்கள். கோபுரத்தின் உச்சியிலும் பிரகாரத்திலும் நூற்றுக் கணக்காகக் கூலியாட்கள் சிற்பவேலை செய்துகொண்டிருந்தனர். மண்டபத்தின் தூண்கள் மிகப் பெரியன; இப்போது செய்யப் பெற்றவையாயினும் பண்டை முறையிலேயே சிற்ப வேலை நிரம்பியுள்ளன. கோயிலினருகில் சிதைந்த தூண்களைப் பார்த்தோம்; இவை யாவும் முன்னை நாகரிகத்தின் சின்னங்களாக விளங்குகின்றன.

கோயிலுக்குச் சமீபத்திலுள்ள அகலியா பாயின் ஆலயத்தையும் பார்த்து வந்தோம்; சலவைக் கற்களாலாகிய படிக் கட்டின் கீழே ஓர் அறையில் அமர்ந்துள்ளார் சோம நாத மூர்த்தி. யாவரும் மூர்த்தியை யணுகி பூஜை, நைவேத்தியம் முதலியன செய்யலாம். வெறுங் கையோடு சென்ற யாங்கள், வேறொன்றும் கையி வில்லாதவர்களாய் இதய கமலத்தை இறைவனது அடியிணையில் பொருத்தித் திரும்பினோம்.

சோமநாதபுரத்தில் நாங்கள் சிறிது நேரமே தங்கினோம் எனினும், அச்சிறிய காலவரையுள் ஆலயத்தின் பண்டைப் பெருமையையும், ஆலயத்தைக் காப்பதற்காக மாந்தர் பட்ட பாட்டினையும் உணர்ந்த நாங்கள் பல நூற்றாண்டுகள் அங்கேயே கழித்ததுபோல் மனவெழுச்சி பெற்றோம். ஆலயத்தில் இனிச் செய்யவேண்டிய திருப்பணியைச் சலவைக் கல்லில் உருவாக்கி வைத்துள்ளனர் பெரியோர்; இதைக் கண்ட நாங்கள், இனி இந்த ஆலயத்திற்கு வளர் பருவமேயன்றித் தேய் பருவம் இருப்பதற்கு நியாயமில்லை என்று மகிழ்ந்து திரும்பினோம் வெராவலுக்கு.

ஹிந்துசட்ட மாறுதல்கள்

ஸ்ரீமான். P. M. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், B. A., M. L.,
(Retd. Dist. Judge.)

ஹிந்து விவாக சட்டம் (நெ. 25/1955) விவாக ரத்து செய்வதற்கும், தம்பதிகளை விவாகத்தை ரத்து செய்யாமல் வேறு படுத்துவதற்கும் ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது. ஷை சட்டம் 18-5-1955ல் அமுலுக்கு வந்தது. சட்டத்திற்கு முந்தியோ பிந்தியோ நடந்த விவாகங்கள் கீழ்க் கண்ட காரணங்களால் ரத்து ஆகக்கூடியவை:

தம்பதிகளில் ஒருவர்

1. வேறொருவருடன் சம்பந்தம் வைத்துக்கொண்டு வியபிசரிப்பது;

2. ஹிந்து மதத்தை விட்டுவிட்டு மற்றொரு மதத்தில் சேர்ந்து விடுவது;

3. ரத்து செய்ய மனு தாகல் செய்யும் தேதிக்குமுன் வரையிலும் 3 வருஷ காலம் தொடர்ச்சியாக நிவர்த்தியாக முடியாத மதிப்ரம்சம் அடைந்திருப்பது;

4. மனுவுக்குமுன்வரையிலும் தொடர்ச்சியாக 3 வருஷ காலம் நிவர்த்திக்கமுடியாத கொடுமையான குஷ்டரோகத்தால் வருந்துவது;

5. மேலே விவரிக்கப்பட்ட 3 வருஷ காலம் தொத்திக் கொள்ளக் கூடும் சுக ரோகம் (venereal diseas) அடைந்திருப்பது;

6. சம்சார வாழ்க்கையிலிருந்து துறவி ஆகி விடுவது;

7. தேசாந்தரவாசியாகவோ அல்லது வேறு விதத்திலேயோ மறைந்து, தொடர்ச்சியான 7 வருஷ காலம் வரையில் தன்னைப் பற்றி யாருக்கும் தெரிந்து கொள்ள முடியாமலிருப்பது;

8. கோர்ட்டு உத்தரவால் தம்பதிகள் பிரிக்கப்பட்ட பின் குறைந்தது இரண்டு வருஷ காலம் அவர்கள் சேராமலிருப்பது;

9. கோர்ட்டாரால் தம்பதிகளில் ஒருவர் மற்றவருடன் கூடியிருக்கவேண்டுமென்று கட்டளையிடப்பட்டும், அப்படிக் கூடாமலிருப்பது.

ஷை அம்சங்களில் எது ஒன்று இருந்தாலும் கோர்ட்டில் மனு தாகல் செய்து விவாகத்தை ரத்து செய்து கொள்ளலாம்.

மேலும் இந்த சட்டத்திற்கு முந்தி, முதல் தாரமிருக்கும்போது இரண்டாவதாக ஒரு புருஷன் ஒரு ஸ்திரீயை

மணம் புரிந்தால், மேற்படி முதல் தாரத்துக்கு தன் விவாகத்தை ரத்து செய்து கொள்ள உரிமை உண்டு. சட்ட தேதிக்கு முந்தி இருந்தே ஒரு தாரமிருந்தும், இரண்டாவது விவாகம் செய்து கொண்டானென்று இரண்டாவது தாரம் தன் விவாகத்தை ரத்து செய்ய மனுப் போடலாம். இப்படி மனுக்கள் செய்யும் காலத்தில் இரண்டு மனைவிமாரும் ஜீவித்திருக்கவேண்டும். விவாகமான பிறகு புருஷன் பலவந்தப் புணர்ச்சி முதலான குற்றங்கள் செய்திருந்தால் அவனுடன் விவாகமும் ரத்தாகக் கூடியது.

எந்த விவாகமும் அது நடந்த 3 வருஷங்களுக்குள் அஸாதாரணமான காரணங்கள் இல்லாமலிருந்தால் ரத்து செய்ய மனு தாகலாகக் கூடாது. 3 வருஷத்திற்குள்ளாகவே மனு தாகல் செய்யவேண்டுமானால் அதற்கு கோர்ட்டார் அனுமதிக்கலாம்.

கோர்ட்டார் விவாகத்தை ரத்து செய்த பிறகு அல்லது அந்தத் தீர்ப்பின்மேல் அப்பீல் ஆகி இருந்தால் அப்பீல் முடிந்த பிறகு வேறு விவாகம் செய்து கொள்ள உரிமையுண்டு. ரத்தான விவாகத்தின் மாஜீ தம்பதிகளே தீர்ப்பிற்கு ஒரு வருஷம் பிறகு மறுபடியும் புனர் விவாகம் செய்து கொள்ளலாம்.

விவாகம் ரத்து செய்யாமல் கீழ் குறிக்கப்பட்ட காரணங்களினால் தம்பதிகளை பிரிந்திருக்க கோர்ட்டார் நியமிக்கலாம்; இதற்கு கோர்ட்டு மூலமான விச்லேஷம் (பிரிவு) ஆங்கிலத்தில் Judicial separation என்று பெயர்.

தம்பதிகளுள் ஒருவர் மற்றொருவரை தகுந்த காரணமின்றி அந்த மற்றொருவருடைய இஷ்டத்திற்கு விரோதமாக மனுவிற்கு முந்தி மனு தேதி வரையிலும் இரண்டு வருஷ காலத்திற்குக் குறையாமல் விட்டுவிட்டு இருத்தல்;

ஒருவர் மற்றொருவரை ஹிம்சை செய்து, அவ்வித ஹிம்சையினால் தனக்கு ஆபத்து வருமென்று பயப்படக் கூடியதான நிலைமை;

மனு தேதி வரையிலும் குறைந்தது ஒரு வருஷ காலம் கொடுமையான குஷ்ட வியாதியால் தம்பதிகளில் ஒருவர் வருந்துவது;

தம்பதிகளில் ஒருவர் மேல் விவரித்தபடி அதமம் ஒரு வருஷ காலம் மற்றொருவர் மூலமாக வராமல் வேறு விதமாக ஏற்பட்ட சுக ரோகத்தால் வருந்துவது.

மனு தாகல் செய்யும் தேதி வரையிலும் குறைந்தது இரண்டு வருஷ காலம் ஒருவருக்கு மதி கெட்டிருப்பது ;

விவாகமான பிறகு ஒருவர் வேறு புருஷன் அல்லது ஸ்திரீயுடன் கூடுவது.

மேற்படி காரணங்களில் ஏதாகிலும் ருஜுவானல் தம்பதிகளில் ஒருவரை மற்றவரிடமிருந்து தனியாக இருக்கக் கோர்ட்டார் உத்தரவு செய்யலாம். மேற்படி காரணங்கள் முதலில் செய்த உத்தரவை மாற்றவோ, ரத்து செய்யவோ கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டு. ஒருவருடைய தோஷத்தினல் மற்றொருவரிடமிருந்து விலகியிருக்க உத்தரவானல் அவர் மற்றொருவருக்கு தன் ஸ்திதிக்கு அனுகுணமாக ஜீவனம்சமும் கொடுக்க பாத்யபட்டவராவார்.

ஹிந்து தர்ம சாஸ்திரங்கள் ஸ்திரீ தர்மங்களையும் விவாக தர்மங்களையும் பரக்க எடுத்துக் காட்டி இருக்கின்றன. தம்பதிகள் விவாகத்தின் பிறகு தங்களை மரண பர்யந்தம் கூடியிருந்து தர்மார்த்த காமங்களைச் சேர்ந்து செய்து, அவற்றின் பலன்களையும், சுக துக்கங்களையும் பிரியாமலிருந்து அனுபவிக்கவேண்டும். கணவனுடைய சம்பந்தத்தால் ஸ்திரீக்கு புத்திரன் பிறந்தால் கணவனே புத்திரனுகப் பிறக்கிருன். ஆதலால் மனைவிக்கு ஜாயா என்று பெயர் வந்தது. பர்த்தாவுடன் இல்வாழ்க்கையில் இருந்து தன் கார்யங்களை விதிபூர்ணமாகத்தானுள்ளளவும்செய்கிறவள்தான் ஸாத்வி. முதல் மனைவி புருஷப் பிரஜையை விட்டுவிட்டு இறந்தால், அவள் கணவன் இரண்டாவது விவாகம் செய்து கொள்ளவேண்டியதில்லை. விவாகம் தர்மபிராஜார்த்தமாகவே தான் செய்துகொள்ள வேண்டுமே தவிர கேவலம் காமபோகத்திற்கல்ல. கணவன் மரணமானல் மனைவி மறு விவாகம் செய்து கொள்ளாமல் பிரஹ்மசாரிணியாக இருக்கவேண்டும். "ம்ருதே பர்த்தரீ ஸாத்வீ ஸ்த்ரீ பிரஹ்ம சர்யே வியவஸ்திதா" என்று மனுவின் வாக்கியம். ஷை தர்மங்கள் மனு ஸ்மிருதி 5, 9 அத்தியாயங்களில் காணலாம்.

தம்பதிகளின் அன்யோன்ய விச்லேஷம் (பிரிவு) அவர்கள் விவாக விச்சேதம், அல்லது ரத்து செய்தல், நமது சாஸ்திரங்களில் ஆதரிக்கப்பட்டவையல்ல. ஹிந்து சமூகத்தில் ஆங்காங்கு சில வகுப்புகளில் விவாகத்தை ரத்து செய்து கொள்வது அனுட்டானத்தில் இருந்தபோதிலும், 1955 வருஷத்திய சட்டம் ஏற்படும்வரை பெரும்பால் சங்கத்திற்கு விவாக ரத்துக்கு ஒரு வழியும் இல்லாமலிருந்தது. இவ்வழி இப்பொழுது திறந்துவிட்டதனல் விவாக ரத்துக்கு சட்டத்தில் சொன்ன காரணங்கள் இருந்தபோதிலும் அவ்வழியில் போகவேண்டிய நிர்ப்பந்தம் கிடையாது. சட்டம் ஒரு வழியாய் புதிதாகக் காண்பித்ததே தவிர, அதில் நடந்தே தீரவேண்டுமென்று சொல்லவில்லை. ஆதலால் அவரவர்களுடைய சாஸ்த்ர விதிகளையும் குலாசாரங்களை

யும் பின்பற்றி நடப்பதே ஒழுங்கு முறையாகும். பர்த்தா-பார்யை என்று நமது தேசத்தில் அனாதிகாலமாக வழங்கப்பட்டுவரும் பெயர்கள் காரணப் பெயர்கள். இவன் ரக்ஷிக்கிறவன்; அவள் ரக்ஷிக்கப்படுகிறவள். தர்மானுஷ்டானத்திற்காகப் பிரஜையைப் பெறுவது, குழந்தையை வளர்ப்பது, இல்லறத்தை சரிவர நடத்துவது, பந்துமித்ரர்களுக்கு போஜனமிடுவது முதலானவை பார்யையின் பொறுப்பு.

"உத்பாத நமபத்யஸ்ய ஜாதஸ்ய பரிபாவநம்,
பரத்யகம் லோகயாத்ராயா: ப்ரத்யக்ஷம் ஸ்த்ரீநிபந்தநம்."

(மனு. 9-வது அத்யாயம், 27-வது சுலோகம்)

கிரஹஸ்தனுடைய கடமைகளும் மனு ஸ்மிருதியில் பரக்க விதிக்கப்பட்டிருக்கின்றன. தம்பதிகள் அவரவர்களுடைய கடமைகளை தவறுமல்செய்தால் ஒரு குற்றம் குறைவும் ஏற்பட நியாயமில்லை. அப்படி ஏற்பட்டாலும், விவாக ரத்து அக்குற்றம் குறைகளைப் போக்கடித்த போதிலும் வேறு புதிய கஷ்டங்களை உண்டாக்கும்.

பாச்சாத்திய (மேற்கு) தேசத்தில் சரித்ர ஆராய்ச்சியாளர் தீர்மானித்ததாவது: அனாதி காலத்தில் ஜன சமூகங்களில் ஆண் - பெண்கள் எவ்வித நியமமுமில்லாமல் தம் மனம்போனபடி இருந்து வந்தார்கள் (Promiscuity). பிறகு வெகு பதீத்வம் (ஒரு பெண் பல ஆண்களுடன் வாழ்வது) ஏற்பட்டது (Polyandry). அதற்குப் பிறகு பல பத்நீத்வம் (ஒரு புருஷனுக்கு பல ஸ்த்ரீகளுடன் இருக்கும் நிலைமை) காணப்பட்டது (Polygamy). இறுதியில்ஏக பதீத்வமும், ஏக பத்நீத்வமும் வழக்கத்தில் வந்து, பல தேசங்களில் அது சட்ட நிர்ப்பந்தமாகவும் பர்யவஸித்தது (Manogamy). நமது தேசத்தில் முதலாவதான நியமமில்லாத காமபோகமென்பது பிராசீன காலத்திலும் நடைபெற்றதாக ஒரு சான்றும் இல்லை. இரண்டாவது நிலைமையான பல பதிகள் இருப்பதும் நமது பண்டைக் காலத்து இதிஹாஸ புராணங்களால் ஏற்படவில்லை. மஹாபாரதத்தில் த்ரௌபதி சரித்ரமோ என்றால், அவளுக்கு பஞ்ச பாண்டவர்களுடன் நடந்த விவாக முயற்சியை த்ருபத ராஜா ஆக்ஷேபித்ததாகவும் அதற்கு ஒரு அசாதாரணமான சமாதானத்தைச் சொல்லி, அவரை த்ருப்தி படுத்தினதாகவும் பாரதத்திலிருந்தே விளங்குகிறது. ஆதலால் இந்த உதாரணத்தைக் கொண்டு இந்த முறை அக்காலத்தில் வழக்கத்திலிருந்ததாக ஏற்கப்படாது. மூன்றாவது முறை: பஹு பத்நிகள் ஒரே புருஷனுக்கிருப்பது பிரசித்தமான விஷயம். ஆனால் அவ்வழக்கம் பெரும்பாலும் க்ஷத்ரிய ஜாதியிலிருந்து வந்தது. நான்கு பத்நிகளைக் கட்டிக்கொண்டு தசரதன் பட்ட

பாடு எல்லோருக்கும் ஸம்மதம். அந்த நிலை தற்கால சட்டத்திற்கு விரோதமானது. இப்பொழுது ஏகபதீத்வமும், ஏகபத்நீத்வமும்தான் ஆதரிக்கப்படவேண்டும். மேற்குறித்த காரணங்களால் தம்பதிகள் ஒத்து வாழ முடியாத நிலைமையில் விவாக ரத்து என்று ஒரு உரிமை கொடுக்கப்பட்டது. தம்பதிகளில் அன்யோன்ய அனுராகமும் க்ஷமை (பொறுமை)யும் மிக அவச்யமானவை. பொறுமையின் பெருமை இராமாயணத்தில், பால காண்டம் 13வது ஸர்கத்தில் ராஜா குசநாபனுடைய 100 புத்திரிகள் வாயு தேவனிடத்தில் நடந்து கொண்ட விஷயத்தில் பகவான் வால்மீகி இவ்வாறு வர்ணித்திருக்கிறார் :

"க்ஷமா தாநம் க்ஷமாயஞ்ஞ: க்ஷமாயத்யம் புத்ரிகா:
க்ஷமாயச: க்ஷமா தர்ம: க்ஷமயாவிஷ்டிதம் ஜகத்."

"தான யாகங்களால் வரும் பலன் பொறுமையினால் கிடைக்கும். குழந்தைகளே! ஸத்ய, தர்ம கீர்த்திகளால் பெரும் பலன் பொறுமையால் பெறலாம். பொறுமையில் தான் லோகமெல்லாம் நிற்கிறது" என்பது மேற் சலோகத்தின் கருத்து.

இத்தகைய பொறுமை இருந்தால் க்ரோத மோஹங்களால் தலையெடுக்கும் த்வேஷம் தணிந்து விவாக விச்சேதம் சட்ட ஏட்டிலேயே இருந்து அனுட்டானத்திற்கு வர இயலாது.

இந்த சட்டத்தில் சில குறைகளைக் காணலாம். ஹிந்துக்களில் எல்லா வர்ணத்தாரும், புருஷ பிரஜை பிறக்காவிட்டால் வேறு விவாகம் செய்து கொள்ளும் பழக்கம். அதற்குக் காரணம் புத்திரன் இருந்தால் இஹத்திலும் ஸௌக்யம் பெறலாம், பரத்திலும் நல்ல கதி கிடைக்குமென்பது. "புந்நாம நரகாத்திராயத் இதிபுத்ர:" "புத்" என்னும் நரகத்திலிருந்து தந்தையைக் காப்பதனால், அவனுக்குப் புத்ரனென்று பெயர்". இப்பொழுதிய சட்டப்படி பிள்ளையைப் பெறவில்லை என்ற காரணத்தால் விவாகம் ரத்து செய்ய முடியாது. கலியாணம் ரத்தாகாமல் மறு விவாகம் செய்து கொள்வது குற்றம். ஒரு தாரத்திற்கு தீராநோய் வந்தால் அவள் சம்மதித்தே வேறு தார பரிக்ரஹம் நடப்பதுண்டு. இந்த சட்டம் அதற்கும் இடம் கொடுக்காது. விவாக ரத்திற்குக் காரணமாயுள்ள நோய் இருந்தால் அந்த விவாக ரத்து செய்து பிறகு இரண்டாம் விவாகம் செய்து கொள்ளலாம். அந்த முதல்தாரம் நோயாளி ஆனதாலும், விவாக ரத்தினால் கணவனை இழந்தவளாயும், தந் தேஹ ஸ்திதியினால் வேறொருவருக்கும் வாழ்க்கைப்பட முடியாமலும் கதியற்றவளாவாள். இவ்விதமான பல குறை சட்டசபையார் நிவர்த்திக்கக் கடமைப்பட்டவர்கள்.

அலை மோதல்

வை. மு. பத்மினி ஸ்ரீநிவாஸன்

"குவா...குவா....குவா..." என்று பூமி தேவியின் மடியில் விழுந்த சிறு குழந்தையின் குரல்.

"பகவானே இதுவாவது ஆண் குழந்தையாய் இருக்க வேண்டுமே" ஒரு இதயத்தின் துடிப்பு.

"ஐயோ இதுவும் பொட்டையா" ஒரு ஹீன பரிதாபக் குரல்.

இது காதில் விழுந்ததுதான் தாமதம் விஸ்வநாதனின் உள்ளம் துள்ளியது. பாய்ந்தார் ப்ரஸவ அறையின் வாயிலை. "காமு வீணாய் மனதை அலட்டிக் கொள்ளாதே" மரம் வைத்தவன் தண்ணீர் வார்க்கிறான். இந்த சமயம் மனம் தளரக்கூடாது. உன் உடம்பு முக்யம். அழாதே.... த்ருடப்படுத்திக்கொள்" என்று தேற்றினர். ஆனல் அவர் மனம் படும் பாட்டை யார் வர்ணிப்பது?

பறக்கப் பறக்க வென்னீர் குடத்துடன் வந்த பானு குழந்தையின் குவா குரலைக்கேட்டு "பகவானே இதுவாவது ஆணாய் இருக்கவேண்டுமே" என்று ஏங்கியவாறு ஓடி வந்தாள். அறை வாயிலிலேயே இருக்கும் தந்தையைக் கண்டு "அப்பா....என்ன குழந்தை?"

"பெண்"...

...அவ்வளவுதான். இடுப்பிலிருந்த குடம் தடார் என்ற ஓசையுடன் பெருக்கெடுத்தது. ப்ரமை பிடித்த பானுவின் கண்களுக்கு வீடே தட்டமாலை சுற்றுவதுபோல் இருந்தது. ஏழாவதும் பெண், ஏழும் பெண். தெய்வமே இதுவும் ஒரு சோதனையா....அவள் கால்கள் நடுக்கலுற்று நிற்கவும் மாட்டாது கெஞ்சியது.

உள்ளிருந்து வெளி வந்த நர்ஸ் "சார் அம்மா மிகவும் பலஹீனமாய் இருக்கிறார். டாக்டர் உதவி இருந்தால் நல்லது. ஜாக்கிரதையாய் பார்க்கவேண்டும்" என்று எச்சரித்துவிட்டு சென்றாள்.

பாவம்! பீதி அடைந்த விஸ்வநாதன் உடைந்த உள்ளத்தோடு லேடி டாக்டர் வீட்டை நோக்கி நடந்தார். அவர் மனமோ கடல் அலைபோல் எழும்பி எழும்பி பல எண்ணங்களை உடைத்தது. "சீச்சீ...என்ன சமூகம் பெண் என்றால் இப்படியா...பெண்ணாய் பிறந்தவர்களே "பொட்டை" என்று பெண் வர்க்கத்தை மட்டமாக்குவதா....பெண் என்றால் எதில் குறைவு. கல்வி, செல்வம், சக்தி, மூன்றும் பெண் ரூபம் தானே. பெண் என்றால் நடுங்குவதற்கு காரணம் வறுமை...வறுமை....பணக் கொடுமை...அதற்கு மேல் சிந்திக்க மாட்டாது தலை சுற்றியது.

அதே சமயம் பானுவின் மனம் வேறு விதமாய்க் கலங்கித் தவித்தது. "ஊம்...நான் பிறந்தபோது இந்த வீட்டில் இருந்த குதூகலம் என்ன!....இன்று பிறந்த பெண்ணுக்கு நடக்கும் வரவேற்பு என்ன? வறுமை...வரதக்ஷிணை...இதற்கு இவ்வளவு வலிமையா? வரிசையாய் ஆறு பெண்களைப் பார்த்து பார்த்து மனம் விள்ளும்படி தவிக்கும் பிறவிகளுக்கு ஒரு ஆண் மகனைக் கொடுத்து சாந்தி செய்யக்கூடாதா? இல்லை வறுமையிலிருந்து மீளும் வழியாவது செய்யக்கூடாதா இந்த தெய்வம்...? 23 வயதை அடைந்த எனக்கே மணம் செய்ய வழியில்லாது தவிக்கையில்...என் தங்கைமார்களின் கதி...இன்று வந்த சிறுமியின் கதி...அதற்குமேல் சிந்தனை செய்ய மாட்டாது சோர்வுற்று தரையில் படுத்தாள்.

... பறக்க பறக்க டாக்டருடன் ஓடிவந்த விஸ்வநாதன் மனைவியின் நிலை எப்படி இருக்குமோ என்ற நடுக்கத்துடன் உள்ளே நுழைந்தார். மூடிய கண்களிலிருந்து ஓடும் அருவியைக் கட்டுப்படுத்த சக்தியற்று துவண்டு கிடக்கும் காமுவின் நிலை அவர் உள்ளத்தைக் கலக்கியது.

டாக்டர் தன் பரிசோதனைகளை செய்து முடித்து சோர்ந்த கண்களோடு விஸ்வநாதனை நோக்கினார். ஒரு அடி தள்ளி அவரை அழைத்து மெல்லிய குரலில் "இருதயம் ரொம்ப பலஹீனமாய் இருக்கிறது. ஏதோ அதிர்ச்சிதான் காரணம். உடம்பு இவ்வளவு கேவலமாக என்ன அப்படிப்பட்ட அதிர்ச்சி? அதைப் போக்க முதலில் வழி தேட வேண்டும்" என்றாள்.

"டாக்டர்...டாக்டர்...."என்ற காமுவின் ஹீன குரல் டாக்டரின் கவனத்தை இழுத்தது. நோயாளியின் கரத்தை அன்பாய் பற்றி "என்னம்மா...உனக்கு உடம்பு என்ன செய்கிறது சொல்லு உயிருக்கு ஒரு பயமும் இல்லை. கவலையே வேண்டாம்".

"ஊம்...நான் சாவுக்கு பயப்படவே இல்லை.... அது என்னை அணுகவே அணுகாது. இன்னும் எத்தனைப் பெண்களைப் பெற வேண்டுமோ?....டாக்டர்...சற்றுமுன் அதிர்ச்சிக்குக் காரணம் கேட்டீர்களே. ஐந்து பெண் பிறந்தால் அரசனும் ஆண்டி என்பார்கள். ஆண்டிக்கு ஏழு பெண் பிறந்தால்....அவன் கதி....எழுபது ரூபாய் சம்பளத்தில் உண்பதா, உடை உடுத்துவதா, குழந்தைகளை படிக்க வைப்பதா...இல்லை வரதக்ஷிணை ஆயிரக் கணக்கில் கொடுத்து கல்யாணம் செய்வதா...எதை செய்வது....இதில் இதுவும் பெண் என்றால் என் நிலை ஏன் தடுமாறாது சொல்லுங்கள்...அதற்குமேல் பேசமாட்டாது திணறினாள். ஒருவாறு புரிந்துகொண்ட டாக்டர் காமுவை சாந்தப் படுத்தி தைரியம் ஊட்டினாள்.

இன்ஜெக்ஷன் செய்ய மருந்து எழுதி கொடுத்து "சார் இதை உடனே வாங்கி வையுங்கள். அடுத்தத் தெருவுக்கு போய் வருகிறேன்" என்று சொல்லி புறப்பட்டாள்.

பீதியில் தாக்குண்ட விஸ்வநாதன் மெஷினைப் போல் கடையில் மருந்தை வாக்கிக்கொண்டு வீடு திரும்பினர். நேரம் போய் கொண்டிருந்ததே தவிர டாக்டரைக் காண வில்லை. பித்தனைப் போல் அன்றைய பத்திரிகையை எடுத்துப் படிக்கத் தொடங்கினர். பத்திரிகையை பிரிக்கும் போதே கொட்டை எழுத்துக்களில் உள்ள ஒரு செய்தி அவர் கவனத்தைத் கவர்ந்தது. வரதக்ஷிணை பேயின் அரிய சக்தியை படிக்கும் சமயம் அவருடைய ஆப்த சினேகிதர் பக்கத்தில் வந்து "என்னப்பா பத்திரிகையை வைத்துக் கொண்டு அலறுகிருய். அப்படி என்ன விஷயம். ஆமாம் பெண் பிறந்தாளாமே? சௌக்கியமா?" என்று விசாரித்தார்.

எதனாலோ விஸ்வநாதனின் உள்ளம் குழம்பியது. "ஆம் ஆண்டிக்கு ஏழாவது பெண். என்னைப்போல் பெண்ணைப் பெற்ற ஒருபாவியின் பெண், வரதக்ஷிணை தர முடியாது தவிக்கும் தந்தையை மீளவைக்க தற்கொலை புரிந்துகொண்டு மாண்டாளாம். அதைப் படித்துதான் பிரமித்தேன்" என்று சொல்லும்போது டாக்டர் வருவதை அறிந்து வீதிக்கு ஓடினர்.

அமைதியுடன் வந்த டாக்டர் நோயாளிக்குச் செய்ய வேண்டிய சிகிச்சைகளை செய்து முடித்து சாவதானமாய் காமுவின் அருகில் அமர்ந்து "அம்மா உடம்பைப் பத்திரமாய் பார்த்துக் கொள்ளுங்கள். பெண் கல்யாணங்களுக்கு ஓடி யாட வலு வேண்டாமா?"

"ஊம். பெண் கல்யாணமா? இது இந்த ஜென்மத்தில் நடக்கப் போகிறதா?"

"ஏன் அப்படி பேசுகிறீர்கள். அதைச் சொல்ல தானே நான் வந்தேன். நான் டாக்டராய் மட்டும் வர வில்லை. பிள்ளைவீட்டு சம்மந்தியாய் தான் வந்து இருக் கிறேன்."

ஒருவரும் ஒன்றும் புரியாது ப்ரமித்தார்கள். காமு உணர்ச்சியை அடக்கமாட்டாது திணறியவாறு "டாக்டர்... டாக்டர் என்ன பேசுகிறீர்கள். ஒன்றும் புரியவில்லையே... என்ன சொல்லுகிறீர்கள்.... என்று இதயத் துடிப்பு அதிகரித்துத் தவித்தாள்.

டாக்டர் தன் அன்பு பூராவும் சொறிந்து காமுவை அணைத்து சாய்ந்தபடி "அம்மா... ஏன் பதறுகிறீர்கள். பகவான் ஒருவர் மூலமாய் ஒரு காரியத்தை முடித்து வைப்

பான். இன்று காலை உங்களைப் பார்த்ததுமே ஏனோ உங்கள் மேல் என்னை அறியாது பாசம் ஏற்பட்டது. உங்கள் உடல் நிலைக்கு ஔஷதம் மட்டும் பயன்படாது. மனக் கவலை குறைந்தால் தான் உயிர் பிழைப்பீர்கள் என்று வீட்டுக்கு நேராய் ஓடினேன். என் மனம் உங்கள் குடும்பத்தைப் பற்றி பட்ட பாடு கடவுளுக்குத்தான் தெரியும். ஏதோ சமயோசிதமாய் பகவான் ஒரு யோசனையைக் கொடுத்தார். என்னிடம் கம்பௌண்டராக இருக்கும் பிள்ளையிடம், அவன் தாயாரை அழைத்து வரச் சொல்லி விஷயம் பூராவையும் சொல்லி பானுவை மணக்கும்படி செய்தேன். அவன் ஏற்கனவே பானுவைப் பார்த்திருப்பதால் சம்மதப்பட்டு விட்டான். அவர்களும் காரில்தான் உட்கார்ந்து இருக்கிறார்கள். என்ன உங்கள் சம்மதம்!

இதைக்கேட்ட பானு, விஸ்வநாதன் சந்தோஷத்தால் வாய் அடைத்து மௌனமானார்கள். காமு ஆனந்தம் பொங்க, "நிஜமாவா டாக்டர்?...நான் கேட்பது உண்மையா?...தற்சமயம் நீங்கள் தெய்வமாய்தான் தோன்றுகிறீர்கள்....பார்வதி தேவிதான், நீங்கள் அம்பிகைதான்.... ஆனால்...ஆனல்....டாக்டர் வரதக்ஷணைக்கு என்ன செய்வேன்?...பணம்...பணம்....அதற்குமேல் பேசமாட்டாது கண்களை மூடி மௌனமானாள். கண்கள் மட்டும் ஆனந்தக் கண்ணீர் துக்கக் கண்ணீர் இரண்டையும் சேர்த்துப் பொழிந்தது.

"அம்மா நீங்கள் இவ்வளவு பலஹீனத்தில் இப்படி படபடப்புக்கு இடம் தரக்கூடாது. நீங்கள் காலணா தர வேண்டாம். பானுவை மட்டும் அளித்தால் போதும்...சரிதானா இனி உடம்பை ஜாக்கிரதையாய் பார்த்துக்கொண்டு கல்யாணத்தில் ஓடி வேலைசெய்ய வேண்டும். இது என் உத்தரவு" என்று சொல்லி சிரித்தவாறு காமுவைத் தட்டிக் கொடுத்தாள்.

காரில் இருந்தவர்கள் உள்ளே வந்தார்கள். டாக்டர் இருவரையும் அறிமுகம் செய்து வைத்தாள். ஏழ்மையிலும் பொலிவுடன் ப்ரகாசிக்கும் பானுவின் முகம் அவர்களைக் கவர்ந்தது.

டாக்டரின் மருந்தைவிட அவளுடைய ஆறுதல் மொழியின் வலிமையே வெற்றி பெற்று காமுவை த்ருடசாலியாகச் செய்தது என்றால் மிகையேது. அவ்வளவுநேரம் பக்கலில் இருந்த குழந்தையை தொடவும் மறுத்த காமுவின் அதே கைகள் ஆனந்தத்தால் சிறு குழந்தையை அணைத்தது. இதைக் கண்ட எல்லோருடைய கண்களும் ஆனந்தக் கண்ணீரை பெருக்கியது.

நக்ஷத்ர மண்டலம்

சந்தியா

தனது ஆதிக்கத்தை எதிர்ப்பவர் எவருமில்லை என்ற ஆணவத்துடனே அனைவரையும் தனது கிரணங்களினால் சுட்டு எரித்து விளையாடிக் கொண்டே ஆதவன் ஆகாயத்தில் பவனி வந்து கொண்டிருந்தான். அதனால் மிக சிரமம் உணர்ந்தவர்கள் அவனுடைய பார்வையிலிருந்தே தங்களை மறைத்துக்கொண்டு நடக்கலாயினர். அவர்கள் கட்சியில் சேர்ந்த நானும் மெள்ள மாம்பலத்தில் சிவஞான தெருவில் எட்டாம் நெம்பர் வீட்டின் எதிரில் சென்று நின்றேன். அந்த வீட்டின் தோட்டத்தில் நான் கண்ட நிகழ்ச்சி என்னை வியப்பிற்குள்ளாக்கியது. நான் யாரைத் தேடிச் சென்றேனோ—அவரே அந்த உச்சி வெய்யிலில் நின்றுகொண்டு-தமது தோட்டத்திலுள்ள (ஒவ்வொரு சிறு செடி உள்பட) பூச்செடிகளை குசலம் விசாரித்து பராமரித்துக் கொண்டிருந்தார். இந்த கர்வம் பிடித்த சூரியனை சட்டை செய்யாதவர் ஒருவர் இருக்கிறாரே என்னும் பெருமிதத்துடன் அவரை நிமிர்ந்து பார்த்தேன். அந்த பொல்லாத சூரியனோ வெட்கத்துடன் கப்பென்று தன்னை மேகத்துள் மறைத்துக் கொண்டு விட்டான். அதற்குள் என்னை கவனித்துவிட்ட **சந்தியா** அவர்கள் என்னை வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றார். நான் வந்த விஷயத்தைப் பற்றி என் வாய் மூலமாகவே கேட்டுக்கொண்ட அவர் ஏனோ ஒரு மாதிரியாக சிரித்தார். திடீரென்று அவர் "நீங்கள் என்னை யாரென்று நினைத்துக் கொண்டு இப்பொழுது பேசிக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார். நான் திகைத்தேன். அவரை சந்தியா என்று நினைத்துக் கொண்டுதான் அதற்கு ஏற்ப நான் பேசிக் கொண்டிருந்தேன். ஆனால் அவரது கேள்வி என்னையே சந்தேகிக்கச் செய்துவிட்டது. தயங்கிக்கொண்டே "நீங்கள் சந்தியாதானே?" என்று கேட்டேன். புன்னகையுடன் ஆமோதித்த அவர் தனது பரிட்சையின் காரணத்தையும் விளக்கினார். அவரையும் அவரது சகோதரி வித்தியாவதி அவர்களையும் தேடிவருகிற பட முதலாளிகளும், பத்திரிகைக்காரர்களும், இச் சகோதரிகளில் வேற்றுமை காண முடியாது திண்டாடும் வழக்கத்தைப் பற்றி கூறி விட்டு விழுந்து விழுந்து சிரித்தார். அம்மாதிரி அண்மையில் நடந்த சில சம்பவங்களைக் கூறி என்னையும் சிரிக்க வைத்தார். அவரது பரிட்சையில் சரியான விடை அளித்து தேறி விட்டதைப் பற்றி என்னை நானே பாராட்டிக் கொண்டேன்.

பெங்களூரில் ஒரு அரசாங்க அலுவலகத்தில் பெண் குமாஸ்தாவாக முதலில் பணி ஆற்றிக் கொண்டிருந்த இவரை ஒரு நாள் ஸ்ரீதேவி நாடி வந்தாள். வலியவந்த ஸ்ரீதேவியை விரட்டிவிட்டதல்லாமல், மீண்டும் வந்திடுவாளோ என்று பயப்படுவதேப் போல் வாயிற் கதவை தாளிட்டும் வைத்தவர் இவர். சிறிதும் சளைக்காத அந்த ஸ்ரீதேவி கதவிலுள்ள சாவித்துவாரத்தின் வழியாக புகுந்து இவரைக் கெட்டியாகப்பற்றிக்கொண்டு விட்டாள். ஆம்! சந்தியா அவர்கள் தனது படவுலக பிரவேசத்தைப் பற்றிக் கூறுவதை கேட்கும் பொழுது மேற் கண்டவாறுதான் நினைக்கத் தோன்றுகிறது. படவுலக பிரவேசத்திற்கு இவர் ஊன்றிய கடைக்கால் **கற்கோட்டை** என்பதை அறியும் பொழுது, இவரது புகழும் கற்கோட்டை போன்று உறுதியாக நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமே இல்லை. இவர் கண்டிப்பு மிகுந்தவர் என்பது தன்னைத் தேடிவரும் நபர்களை உபசரிப்பதிலிருந்தே தெரிய வருகின்றது. அவர் அடுக்கு அடுக்காக கூறும் பானங்கள் ஏதாவது ஒன்றை ஏற்றுக்கொண்டு குடித்தே தீரமுடியுமே தவிர, ஒன்றுமே வேண்டாமென்று மறுத்துவிட்டு எழுந்து வர முடியாது. அவ்வளவு அழுத்தமான அன்பு!

"மாயாபஜார்" "மணிமேகலை" "அன்பே தெய்வம்" இன்னும் பெயர் வைக்கப்படாத சில படங்களில் நடித்துக் கொண்டிருக்கும் இவர் ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம், தமிழ் முதலிய பாஷைகள் தெரிந்தவர். —சாரக்ராகி

இம் மாதத்தில் பிறக்கப் போகும் தமிழ் புத்தாண்டின் வாழ்த்துக்களை எனது மதிப்பிற்குகந்த ரசிகர்களும், ஜகன் மோகினி என்னும் இப் பத்திரிகையின் வாசகர்களுமான உங்களுக்குத் தெரிவிப்பதுடன் அல்லாமல், **நயா பைசா** என்னும் பெயரில் இம் மாதத்திலிருந்து நம்முடன் உறவாடப் போகும் புதிய நாணயங்களுக்கும், உங்களுடன் சேர்ந்து வரவேற்பு கூறுகின்றேன்.

இப்பொழுது நான் கையில் பிடித்திருக்கும் பேனாவுடன் நீண்ட காலமாகவே எனக்கு பரிச்சயம் உண்டு. இதை படித்துவிட்டு, இலக்கியம் என்னும் இன்பக் கடலிலே, பேனா என்னும் துடுப்பைக் கொண்டு கற்பனை என்னும் படகிலே ஆனந்தமாகப் பிரயாணம் செய்யும் எழுத்தாளர்களின் கூட்டத்தில் என்னைச் சேர்த்து விட்டீர்களானால் தவறு உங்களுடையதாகிவிடும். எனது ஊராகிய பெங்களூரில் ஒரு அரசாங்க அலுவலகத்தில் வெறும் கூட்டல் கழித்தல் கணக்கை போடுவதும், புரியாத எழுத்தில் இருக்கும் புரியாத விஷயங்களுக்கு நகல் எடுப்பதும், மேலதிகாரிகள் கூப்பிட்ட குரலுக்கு ஓடுவதுமே தொழிலாகக் கொண்ட குமாஸ்தாக்களில் ஒருத்தியாக இருந்தேன். அந்த காலத்தில் கையில் எடுத்த பேனாவை கீழே வைக்க நேரம் இருக்காது. (அப்படி நேர்ந்து கீழே வைத்து விட்டாலும் அப் பேனாவினுடைய மசி நம் கைவிரலில் ஒட்டிக்கொண்டு, பேனாவிற்கும் நமக்கும் உள்ள உறவை சாட்சியாக இருந்து உரைத்துவிடும்.) அப்பொழுதெல்லாம் என் பார்வை என் மேசையின் மேலுள்ள பைல்களுக்கு அப்பால் சென்றதில்லை. என் கற்பனையோ - எனது காரியாலய கட்டிடம், எனது வீடு போன்ற இடங்களுக்கு புறத்தே விரிந்ததில்லை. அப்படி இருக்க நான் ஒரு நடிகையாக மாறுவேன் என்று அப்பொழுது எவ்வாறு நினைத்திருக்க முடியும்? படம் பார்பதுகூட தவறு என்று நினைத்த பெரியவர்களின் வார்த்தைக்கு மதிப்பு வைத்து, சினிமா பார்ப்பதையே வெறுத்திருந்தேன்.

நான் காரியாலயத்திற்கு போகும் பொழுதும் வரும் பொழுதும் அடிக்கடி கெம்பராஜ் தம்பதிகளை வழியிலே சந்திப்பேன். திடீரென்று ஒருநாள் அவர்கள் எங்களது வீட்டிற்கே விஜயம் செய்து எனது பெற்றோர்களிடமே, தங்களது சொந்த படமாகிய கற்கோட்டையில் கதாநாயகியாக நடிக்க என்னை அனுமதிக்குமாறு கேட்டுவிட்டார்கள். முதலில் எனது பெற்றோர்கள் உறுதியாக மறுத்துவிட்டார்கள். இறுதியில் எப்படியோ ஸ்ரீமதி கெம்பராஜ் அவர்கள் சாதகமான பதிலை சாமர்த்தியமாக பெற்றுவிட்டார். பிறகுதான் உங்களுக்குத் தெரியுமே?—பின்னர் "மலைக்



கள்ளன்'', "விப்ர நாராயண'' "தெனலி ராமன்" படங்களில் நடித்தேன்.

ஒரு படத்தின் வெற்றிக்கோ, வீழ்ச்சிக்கோ டைரக்டர்தான் காரணம். அவருக்கே பொறுப்பு அதிகம் என்று பலர் கூறுகின்றனர். நடிகரோ, நடிகையோ, பல படங்களில் நடித்து அனுபவம் பெற்றிருப்பதுடன் அல்லாமல் புகழ் குன்றின் உச்சியிலே பிரகாசித்துக் கொண்டிருப்பவராக இருக்கலாம் - பல நல்ல - அருமையான யோசனைகள் தோன்றியும், அந்த டைரக்டர் கூறுவதற்கு மேற்கூறிய காரணத்தைப் பற்றியே தயங்கலாம். அன்றி கூறினலும் நடிகரால் அன்றி நடிகையினல் அசட்டை செய்யப்படலாம். இதனல் டைரக்டர் வார்த்தையை மீறுபவர்களும் படவுலகில் இருக்கிறார்கள் என்று நீங்கள் நினைக்கக் கூடாது. படத்தின் வெற்றிக்கு டைரக்டரின் பொறுப்பை காரணமாகக்கூறுவதைவிட ஒத்துழைப்பின் அவசியத்தை உணர்ந்து நடந்தால் நிச்சயம் வெற்றி கிடைக்கும் என்பதற்காக உதாரணமாகக் குறிப்பிட்டேன்.

183207

எனது பொழுது போக்குகள்—ரேடியோ கேட்பது. கர்நாடக சங்கீதம், ஸிலோன் சங்கீதம் இரண்டும் நான் கேட்பதுண்டு. ஆனால் மறந்தும் பிற்பகலில் மாத்திரம் ரேடியோவில் மதராஸ் நிலையத்தை திருப்ப மாட்டேன். ஏனெனில் ரேடியோ நிலையத்தார் மட்டரகமான சங்கீதத்தின் பேரிலும் பரிதாபங் கொண்டு பிற்பகலை அதற்கென்று ஒதுக்கி இருக்கின்றார்கள். அந்த வேளைகளில் பத்திரிகைகளில் மூழ்கிவிடுவேன். தினந்தோறும் விடியற் காலையில் சிறிது தூரம் வாக்கிங் செல்லுவேன். (சிலர் காரில் போவதுபோல் அல்ல. நடந்துதான்.) சைதாப் பேட்டைக்குச் சென்று ஸ்விம்மிங் பூலில் நீந்துவதுதான் எனக்கு பிடித்தமான பொழுது போக்கு. எனக்குப் பிடித்த மான நடிக, நடிகையர்கள் ராஜ்கபூர், சிவாஜி கணேசன், அஞ்சலிதேவி, சாவித்ரி. மாயா பஜாரில் சாவித்ரியுடன் நான் நடிக்கிறேன். ருக்மிணியாக நானும், வத்சலையாக சாவித்ரியும், அதில் தோன்றுகிறோம்.

எனது லட்சியங்கள்—வெளி நாடுகள் சுற்றுவதும், சொந்த படம் எடுக்கும் யோசனையும் உண்டு. இந்த இரண்டாவது விஷயத்தில் என்னுடைய துணிச்சலைப் பற்றி வியப்படைவீர்கள். சொந்த படத்தை எடுக்கப் பணம் எவ்வளவு தேவையோ, அதைவிட பல மடங்குகள் அதிகமாக நிதானம் தேவை. அவசரமின்றி, ஒரு சிறு செயலைகூட ஆழ்ந்த யோசனையின் மேல் செய்தால் சொந்த படம் யார் எடுத்தாலும், ரூபாய்க்கு பதினைந்தரையணா—அடடா! ரூபாய்க்கு தொண்ணூற்றொன்பது நயா பைசாக்கள் வெற்றி நிச்சயமாகக் கிட்டும். இதில் சந்தேகமில்லை. சொந்தப்படத்தைப் பற்றி இதுவே என் அபிப்பிராயம். பொதுவாக சினிமா உலகைப் பற்றி எனது அபிப்பிராயம்—சிலர் நினைப்பது போல் சினிமா என்பது சகதியல்ல. காலம் செல்வதைப் பற்றி கவலை கொள்ளாமல், பொறுமையாக, நீண்ட தூரம் என்பதை நினைக்காமல், எப்பொழுதும் நேர்வழியிலேயே சென்றால், சுகந்தம் வீசும் பூஞ்சோலையாக சினிமா விளங்கும். அபாயமோ தீமையோ அதில் ஏதும் இல்லாமலிருப்பதுடன், நிலையான புகழ் கிட்டும். ஆனால் புகழ் பெறுவோம் என்று நினைத்து குறுக்கு வழியில் குதித்தால், வழுக்கி விழத்தான் நேரும். அது சகதியாகத்தான் தோன்றும்.

வணக்கம் பல.

* விருந்தினர் உபசரிப்பு *

[குமாரி. வை. மு. விஜயலக்ஷ்மி 25—3—57-ல் சென்னை ரேடியோவில் பேசியது]

புண்ய பூமியாகிய நம் பாரத நாட்டில் சீரும், சிறப்பும் பண்பாடும் மிகுந்த கலைச்செல்வங்கள் அபரிமிதமாக இருக்கின்றன. ப்ரமாண்டமான ஒரு விருக்ஷத்திலிருந்து எண்ணிக்கையற்ற கிளைகள் பிரிந்து மிக்க உபயோகமான இலையும், பூவும், காயும், கனியும், ஒப்புயர்வற்ற நிழலும் கொடுத்து, கூறாமல் செய்யும் பேருதவியைப் போல் இல்லறம் என்ற விருக்ஷத்திலும் இத்தகைய சிறப்புகள் இருக்கின்றன என்பதை ஒருவராலும் மறுக்கமுடியாது.

இல் என்ற பதத்திலிருந்துதான் இல்லாள் என்ற பெயர் உதயமாகிறது. இதைச் சிறப்பித்தே,

"இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை
இல்லாளும் இல்லாளே யாமாயின்—இல்லாள்
வலி கிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்வில்
புலி கிடந்த தூறாய் விடும்-"

என்று மூதோர் பாடியிருக்கிறார்கள்.

ஒரு இல்லாள் தன் இல்லறத்தில் செய்யவேண்டிய கடமைகள் அனந்தமிருப்பதில், விருந்தினரை உபசரித்தல் என்ற பொறுப்பு, இல்லற தர்மத்தின் சிகரமாகும். விருந்தினர்களை நாம் உபசரிப்பதும், வரும் விருந்தினர் நம்மிடம் நடந்து கொள்வதும்; விளக்கும் ஒளியும், பூவும் மணமும் போன்று பிரிக்க முடியாத இணைப்பாகும். நம்மைத்தேடி வரும் விருந்தினர்கள் நம்மிடத்தில் ஆழமான அன்பும் நம்பிக்கையும் வைத்திருப்பார்களேயானால் நமக்கும் அவர்களிடத்தில் நம்மையறியாமல் ஒருவித விசுவாசம், பூரிப்பு, பாரிப்பு முதலியவைகள் பாசிபோல் படிந்து அவர்களுடன் நாமும் கலந்துவிடும் தன்மையை உண்டாக்கி விடுகின்றன. அவர்களைப் பார்க்கும்போது சூரியனைக் கண்ட தாமரை மலர்வது போல் நம்முள்ளமும், நம்மைக் கண்ட அவர்கள் உள்ளமும் ஏக காலத்தில் மலர்ந்து, இரண்டு மலர்கள் சேர்ந்துகவர்ச்சியான மணமுள்ள கதம்ப மாலையாக விளங்குவதுபோல் நம் அன்பும் ஐக்கியமும் ஒருமித்து ப்ரகாசிக்கின்றன.

விருந்தினரை உபசரிக்கும் விஷயத்தில் ஏதாவது குறைபாடுகள் இருப்பினும் அவைகளைப் பொருட்படுத்தாமல் நிறைபாடாக ஏற்றுக் கொள்ளும்படி அவர்களிடை ஊறும் அன்பும், ஐக்கியமும் செய்து விடுகின்றது.

மனமொத்து உண்மையான அன்பிருப்பவர்களிடை இப்படி நிகழ்வது சகஜம். இரு தரத்தினரும் மனக்கசப்பு உள்ளவர்களாய் இருந்தால் வருபவர்க்கும் தர்ம சங்கடம்! வரவேற்பவருக்கும் ப்ராண சங்கடம்!! இப்படி இருப்பவர்கள் பஞ்சபக்ஷ பரமான்னத்தோடு விருந்திட்டாலும், அது ஒரு மனநிறைவோ, த்ருப்தியோ இல்லாது வேப்பங்காயாகக் கசந்து விடுகிறது. இது குறித்தே நம் மூதாட்டி,

"இருந்து இங்கிதம் பேசி ஈரோடு பேன்வாங்கி
விருந்து வந்ததென்று அன்பன் விளம்ப, திருந்தடியாள்
பாடினாள், பேய்பாட்டைப் பாடிப் பழமுறத்தால்
சாடினாள், ஓடோடத்தான்."

என்று கூறியுள்ளார்.

விருந்தினரை உபசரிக்கும் கடமை உலகத்தில் பிறந்தவர் ஒவ்வொருவருக்கும் உரிமையாக வாய்ந்திருக்கிறது. அந்தக் கடமையை கை நழுவ விடக்கூடாது என்ற மனோ உறுதியினால் எத்தகைய கொடிய ஏழ்மை நிலையிலிருந்த போதிலும் கடமையிலேயே கண்ணாக இருந்து செய்துவந்திருக்கிறார்கள். இதற்கு ஆதிகால நூல்கள் எதை எடுத்தாலும் எண்ணிக்கையற்ற அத்தாட்சிகள் கிடைக்கின்றன. கம்ப நாடர் கோசல நாட்டு வாசிகளை கீழ்வரும் செய்யுளால் வர்ணிக்கிறார்.

"பெருந்தடங்கண் பிறைநுதலார்க்குஎலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்
விருந்துமன்றி விளைவன யாவையே"

உதாரணமாக குசேலரின் குடும்பத்தை விட ஏழ்மை நிலைமை உள்ள குடும்பத்தைக் காணவே முடியாது. அந்த நிலையிலும் குசேலரின் மனைவியாகிய சுசீலையின் மாண்பை,

மாசிலாக்குலத்து வந்தாள் வருவிருந்து உப்பளூட்டு
நேசமிக்குடையாள் கொண்கன் நினைப்பறிந்து ஒழுகுநீராள்
தேசுறு வாய்மையுள்ளாள் சினந்திடல் என்றுமில்லாள்
பேசுதிண் கற்புவாய்ந்தாள் பெற்றதே கொண்டு உவப்பாள்"

என்ற பாடலே எடுத்துக் காட்டுகின்றது.

இத்தகைய விலை மதிப்பில்லாத செய்யுட்களின் மூலம் பெரியோர்கள் அனைவரையும் நல்வழியில் திருத்துகின்றனர். ஆனால், இக்காலத்தில் எவ்வளவு அபாரமான செல்வந்தர்களாகவும் படித்தவர்களாகவும் இருப்பினும், சுசீலையின் சிறப்பை எங்கும் காணமுடிவதில்லை.

பூமிதேவியே ஆண்டாளாக அவதரித்து எல்லோரும் நல்லதையே செய்து நன்றாக வாழ்வதற்கு பகவானுக்குப்

பூமாலே சூடிக்கொடுத்து, "அம்பரமே தண்ணீரே, சோறே அறம் செய்யும் எம்பெருமான் நந்தகோபாலா" என்று பா மாலேயும் பாடி, 'இதோ நல்வழி காட்டுகின்றேன்' என்று பறை சாற்றினுள். அதன் கருத்தை அறிந்து நடப்பவர்கள் எத்தனே பேர் என்றுல் விழிக்கத்தான் வேண்டியிருக் கிறது. நவ நாகரீகம் மிகுந்த இந்தக் காலத்தில் பழைய பண்பாட்டின் பெருமையே சிதறிப் போய் பரிதாபப் படக் கூடிய நிலேமையில்தான் காண்கிறோம்.

ஆனல், சீதாபிராட்டியோ, ராவணனல் அசோக வனத்தில் சிறையிடப்பட்டு தத்தளிக்கும் சமயத்தில்கூட தான் தன் கணவனுடன் இருந்து விருந்தினரை உபசரிக்க முடியவில்லேயே என்று ஏங்கித் தவிப்பதை கவி வெகு அழகாக சித்தரித்துக் காட்டுகின்றுர்:

"அருந்தும் மெல் அடகு ஆரிட அருந்தும் என்று அழுங்கும்
விருந்து கண்டபோது என்னுறுமோ என விம்மும்"

இப்படியெல்லாம் நம் நாட்டுப் பெண் தெய்வங்களும் சாதாரண பெண்மணிகளும் கடமையில் கண்ணுயிருந்து விருந்தினரை உபசரிப்பதே நாம் பிறந்ததின் பயன் என் பதை நிதர்சனமாகக் காட்டி யிருக்கிறுர்கள். இச் சந்தர்ப் பத்தில் உண்மையில் நடந்த இரண்டொரு சம்பவத்தையும் கூறத்தான் வேண்டியிருக்கிறது,

என்னேடு படித்த பள்ளிமாணவி வீட்டிற்கு நான் ஒரு காரணமாய்ச் சென்றிருந்தேன். வாசல் நடைபக்கம் போகும் போதே உள்ளிருந்து கனத்த குரலில் பேசுவது கேட்டது. அப் பேச்சின் சாரமாவது:

"இந்த வீடென்ன சத்திரமா? சாவடியா? வருவோர் போவோர் தங்கும் மடமா? அல்லது பெரிய ரயில்வே ஜங் ஷனு? நானும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன். என்னே மட்டும் மண்ணுல் செய்து விறகு வைக்கோலால் சுட்டு வைத்திருக்கிறுர்களா?"—இது பெண்குரல். உடனே,

"சூ! மெள்ளப்பேசு. அவர்கள் டாக்டர் வீட்டிலிருந்து வந்துவிடப் போகிறுர்கள். நம்மைவிட நெருங்கிய உறவினர் சிநேகிதர் யாரும் இவ்வூரில் இல்லாததினுல் இங்கு வந்து இறங்கியிருக்கிறுர்கள். இன்னும் ஒரு வாரம் பொறுத்துக் கொள். இம்மாதிரி சமயம் நமக்கு நேர்ந்தால்.......—இது ஆண்குரல்.

"போதும்! வாயை மூடுங்கள். இன்னும் ஒரு வாரத்தில் சென்றுவிடுவார்களாம்? மண்டையிடி, மார்வலி, தொண்டை சளி என்று இருக்கும் நோய்களேயெல்லாம் கவசமாக அணிந்து கொண்டு நம் ப்ராணனே வாங்குவது மாதக் கணக்குத்தான் ஆகிறது. வாரக்கணக்கில்லே. நமக்கு வந்தால் என்று கேட்கிறீர்கள்! செத்தாலும் நான் வேறு

வீட்டிற்கு போகவே மாட்டேன்''...என்ற உறுமல் முடிவதற்குள் என்னைப் பார்த்துவிட்ட சிநேகிதி ஓடோடி வந்தாள். பாவம்! அவள் முகத்தில்தான் எத்தனை அசட்டுக் களை !

''ஐயோ! என்னை மன்னித்துக் கொள். சனியன்பிடித்த விருந்தாளிகள் வந்து எங்கள் ப்ராணனை வாங்குகின்றார்கள். என் அம்மாதான் பலவீனப்பட்டவளாயிற்றே. அதனால்தான் என்னால் வரமுடியவில்லை'' என்றாள்.

'நோயாளிகளாய் வந்திருக்கும் விருந்தினர்களுக்கு வேறு மருந்தே வேண்டாம் போலிருக்கிறதே' என்று நான் நினைத்துக் கொண்டே திரும்பினேன்.

விருந்தினரை உபசரிப்பது என்றால் சித்திரான்னங்களுடனும், பழவகைகளுடனும், தற்காலத்தில் அர்த்தமில்லாமல், குலோப்ஜான், ரஸகுல்லா, பாதர்ஷா, மோகனடால், டில்லிதர்பார் போன்ற பெயர்களுடன் வழங்கும் பக்ஷண வகைகளுடனும் செய்துவிருந்தளித்து விட்டால் அது விருந்தாகி விடுமா? நோயாளிகளாக வருபவர்களுக்கு கஞ்சி கூழ் கொடுத்தாலும் நம்முடைய இன் சொல்லும், முக மலர்ச்சியுமே, அவர்களுடைய வியாதிக்கு பரம ஔஷதமாகி வைத்தியரின் மருந்தைவிட சீக்கிரம் குணப்படுத்தி விடும்.

டாக்டர்கள் எத்தனை மேதாவிகளாய் இருந்தாலும் கூட, தட்டிக்கொடுத்து, இன்சொல் கூறி தைரியப்படுத்துகிறார்களே, அதுவே அவர்கள் கொடுக்கும் மருந்தைவிட சக்தி வாய்ந்தது.

எத்தகைய விருந்தினராகட்டும்—அதிலும் நோயாளிகளாக வரும் விருந்தினர்களுக்கு—இன் சொல்லும், அன்புமே ப்ரதானமாகிறது.

''ஒப்புடன் முகமலர்ந்தே உபசரித்து உண்மை பேசி
உப்பிலாக் கூழ் இட்டாலும் உண்பதே அமுதமாகும்
முப்பழமொடு பாலன்னம் முகம் கடுத்து இடுவாராயின்
கப்பிய பசியினோடு கடும்பசி யாகுந்தானே''

என்ற பாடல் ஒன்றே விருந்தோம்பலின் அழகை எடுத்துச் சொல்கிறது.

விருந்தினரை உபசரித்தல் என்றால் நம் வீட்டில் வந்து தங்குகிறவர்கள் மட்டும் விருந்தாளிகள் அல்ல. ஒரு கல்யாணம் என்றால் அங்கு வருபவர்களும் விருந்தினரே.

ஒரு சமயம் எங்களை கல்யாணத்திற்கு அழைக்க வந்திருந்தவர்கள், ''மாலை க்ரகப்ரவேசம் அதனால் நீங்கள் எல்லோரும் மத்தியானம் சிற்றுண்டிக்கே வந்து, இரவும் அங்

கேயே இருக்க வேண்டும்; கட்டாயம் வாருங்கள்" என்று அழைத்து விட்டுச் சென்றூர்கள்.

மத்தியானமே அவர்கள் அழைத்திருந்தாலும் நாங்கள் மாலேதான் சென்றோம். அங்கு கச்சேரி நடந்து கொண்டிருந்தது. எல்லோரும் அங்கும் இங்கும் நடந்து நாட்டிய மாடிக் கொண்டிருந்தார்களே தவிர, வருவோரை 'வா' என்றழைக்க வரவேற்பாளர் இல்லே. போவோரைப் 'போ' என்று கூற பொறுப்பாளிகளும் இல்லே. மணியோ நகர்ந்து கொண்டே போய் கச்சேரியும் முடிந்து விட்டது. கல்யாணம் என்ருல் அவர்கள் ஒருவர் பக்கத்திலேயே உட்கார்ந்திருக்க முடியுமா? என்ன இருந்தாலும் 'வா' என்ற ஒரு சொல்கூட வெளிவரவில்லே என்ருல்?

நாங்கள் "போய்விட்டு வருகிரோம்" என்று கூறினேம். உடனே மறுபேச்சின்றி தாம்பூலம் கொடுத்துவிட்டார்கள். அவர்கள் அழைத்த அழைப்பென்ன? இங்கு நடத்திய விருந்து உபசரணே என்ன? எங்களுக்காவது தாம்பூலம் கொடுத்தார்கள். எங்களுடன் வந்த ஆண்பிள்ளேகளுக்கு அந்தத் தாம்பூலம்கூட இல்லே. இதை நினைத்து நினைத்து நாங்கள் இன்னும் ஆச்சரியப் படுகிரோம். இப்படியும் சிலர் விருந்தினர்களே உபசரிக்கிருர்கள் என்பதைக் கூருமல் இருக்க முடியவில்லே.

விருந்தினர் தன் வீட்டிற்கு வரப்போவதை முன் கூட்டியே அறிந்திருந்தால், அவர்கள் வருவதற்கு முன்னேயே ப்ரயாசையாகக் கிளம்பி வெளிச் சென்றுவிடுவார்கள் சிலர். எதற்கு என்ருல் வரும் விருந்தினர் வீடு பூட்டியிருப்பதைப் பார்த்து தன் வீட்டில் தங்காது வேறு இடத்திற்குப் போய்விடுவார்கள் என்பதுதான். இப்படித் தாங்கள் செய்ததை நேராகவே கூறிக் கொள்ளும்போது, 'அட ராகவா! உலகத்தில் இப்படியும் நடக்கிறதா?' என்று வியப்பாக யிருக்கிறது.

விருந்தினரை உபசரித்தல் என்பது சாதாரணமானதல்ல. நம் பெரியோர்கள் ஒவ்வொன்றையும் ஆழ்ந்து யோசித்து பல விஷயங்களே உள்ளே புகுத்திதான் வாழ்க்கையை அமைத்திருக்கிருர்கள். வரும் விருந்தினரை மலர்ந்த முகத்தோடு வரவேற்று இரண்டு நாள் தினுசு தினுசாக சாப்பாடு வகைகள் செய்து போட்டு உபசரிப்பதில், அவர்களுள் அன்பும், ஐக்யமும் பலப்படுவதோடு மட்டுமின்றி ஒரு ஆபத்து என்னும்போது உதவவும், கல்யாண விஷயங்களில் அறிமுகப் படுத்தி முடித்து வைக்கவும், பணம் தேவைபடும் போது கை கொடுக்கவும், மற்றும் வியாபாரம் தொழில் முறைகளுக்கும், பல இடங்களுக்குப் போய்வரத் துணையாகவும், இப்படி அநேக விஷயங்களில்

நன்மைகளும், உபயோகமும் உண்டாவதைக் கண்கூடாகக் காண்கிறோம்.

"ஊரைச் சொன்னாலும் சொல்லலாம், பேரைச் சொல்லக் கூடாது
பேரைச் சொன்னாலும் சொல்லலாம், ஊரைச் சொல்லாதே"

என்பது பழக்கமான மொழி. சில ஊர்களில் விருந்தினரை உபசரித்தல் வெகு வேடிக்கையாக இருக்கும்.

"அட! அட! வாங்கோ. வாங்கோ. என்ன இவ்வளவு நேரமாகி விட்டது?"—இது ஒரு குரல்.

"இலை போடலாமே அவருக்கும்"—இப்படி ஒரு குரல்.

"ஹூம்! அவரெல்லாம் நம் வீட்டில் சாப்பிடுவாரா? என்ன?—இப்படி ஒன்று.

"என்னப்பா அப்படி சொல்கிறீர்கள். அவர் வரும் போதே சாப்பிட்டு விட்டுதான் வந்திருக்கிறார். தொப்பை தள்ளியிருக்கிறது பாருங்கள்"—இவ்வாறாக பல குரல்கள் எழுந்து வந்தவரைத் திக்குமுக்காடச் செய்துவிடும்.

உண்மையாகவே அவர் சாப்பிடாதவராக இருந்தாலும், இந்த நெருக்கடியான சமயத்தில் பேசமுடியாது, வெட்கத்தினால் போய்விடுபவர்களையும் காண்கிறோம். "அட! நான் இன்னும் சாப்பிட வில்லையப்பா, இலைபோடு" என்று கூறும் நபரும் இல்லாது இல்லை. கல்யாண வீடுகளில் தமாஷ் வரவேற்புகள் இப்படியும் நடைபெறும்.

நம் நாட்டுப் பண்பாட்டின் சிறப்பில் விருந்தைப்பற்றி உதித்த பழமொழிகள் ஒன்றிரண்டல்ல.

'விருந்தில்லாத சோறு மருந்து' என்றும்,

'வந்தவர்களுக்கு விருந்தும், வராதவர்களுக்கு உலை நீரும்' என்றும்,

'விருந்திடாது உண்ணும் சோறு வேம்புக்கு ஒப்பாகும்' என்றும் இப்படிப் பல பல மலர்கள் போல் உதிர்ந்துள்ளன. இதன் சிறப்பை எந்த ஒரு உயர்ந்த நூல்களை எடுத்தாலும் மக்களைப்பற்றி கூறும்போது விருந்தைப் பற்றியும், தர்மத்தைப் பற்றியும், கூறாமல் இல்லை.

முக்கியமாக திருக்குறளில் விருந்தைப் பற்றி மிகச் சிறப்பாகக் கூறி,

"மோப்பக் குழையும் அனிச்சம் முகம் திரிந்து
நோக்கக் குழையும் விருந்து"

என்றும், இது போன்ற பல பாடல்களையும் திருவள்ளுவர் நமக்கு அள்ளி வீசியுள்ளார்.

ஆனால், மிக மிக நவநாகரீகம் மிகுந்த இந்தக் காலத்தில் விருந்து வீடுகளில் நடப்பதை விட 'ஹோட்டலில்' நடப்பதைதான் அதிகமாகக் காண்கிறோம். இது காலத்தின் கோலம்.

ரேவதியே ஒரு புதிராக இருக்கிறாளே. இப்போது என்னவோ ரஞ்சனுக்கு ரொம்ப பயப்படுகிறவள்போல், அவனிடம் அன்பு செலுத்துபவள்போல் பேசுகிறாள். சித்திக்குத் தெரியாது ஒரு காரியமும் நடக்கக் கூடாது என்கிறாள். ஆனால் அவளே என்னிடம் வந்து சதாசிவத்திடமிருந்து கடிதம் வந்திருப்பதைத் தெரிவித்தாள்: க்ளப்பிற்குச் செல்லும்போது அம்மாவை எதிர்த்து பேசிவிட்டு போனாள். ஒருசமயம் கோழையாகவும், ஒரு சமயம் திமிருடனும் இருக்கிறாள். இவளை நம்பி எதையும் செய்யக் கூடாது. இருந்தாலும் நாம் கேட்க வந்ததைக்கேட்டு விடுவோம்' இதுபோன்ற குழப்பமும், புதியதாக சந்தேகப் பேயும் சேர்ந்து அவனை ஆட்டிவைத்து கும்மாளம்போட்டு குதித்தன.

ரேவதியின் மௌனத்தைக் கலைக்க எண்ணியவனாய், 'ரேவதி! இனி உன் கல்யாணப்பேச்சை எடுக்கவில்லை. என் உதவியை நான் கோருகிறேன். உன்னுடன் இன்று வந்தார்களே அவர்களை எனக்கு அறிமுகம் செய்துவை. நான் அவர்களில் ஒருத்தியை தேர்ந்தெடுப்பதாக நிச்சயம் செய்துவிட்டேன். நடனமாலாவாகத் திகழும் சாந்தியை ஒருநாள் நம் வீட்டில் ஆடவைக்கப் போவதாகக் கூறியே அதை சீக்கிரமாகவே ஏற்பாடு செய். அம்மாவும் அவள் நாட்டியத்தில் மயங்கி விடுவாள். நானும் அம்மாவை மயக்கி......''

''எனக்குக் கொஞ்சம்கூட உன் நடத்தைப் பிடிக்கவில்லை. நீ இப்படி எல்லாம் பேசினால் அவர்கள் இனி நம் வீட்டுப்பக்கமே வரமாட்டார்கள். என் சிநேகிதத்தையே அறுத்தெறிந்துவிடுவார்கள். அவர்களெல்லாம் என்ன சாமான்யப்பட்டவர்களின் மகளா? பெரியகோடீஸ்வரரின் மகள் ஞாபகமிருக்கட்டும்''.

''எனக்கும் தெரியுமே. அவள் கோடீஸ்வரி என்று, நாம்மட்டும் என்ன தரித்திரர்களா? அவர்களுக்குச் சமமான

வர்கள்தான். எல்லாம் மனதில் ஒரு திட்டம் போட்டு பார்த்த பிறகுதான் உன்னிடம் வெளியிடுகிறேன்''.

"சமமானவர்களாகவே இருக்கட்டும். அதைப்பற்றி நான் மதிப்பைக் குறைத்துக்கொண்டு அவர்களிடம் போய் பல்லை இளிக்கமாட்டேன். வீட்டிற்குப் பெரியப்பிள்ளை யான ரஞ்சனுக்கே கல்யாணமாகாதபோது நீ கேட்கிறாயே உனக்கு வெட்கமாயில்லை? ஓஹோ! புரிகிறது. நான் கல் யாணம் செய்துகொண்டால் உன் காரியம் விரைவில் நினைத்தபடி முடியும் என்ற முன்யோசனையோடு என்னை அப்படி கேட்டாயா? தூ. தூ. ரகு! மற்றொரு தடவை என் னிடம் இம்மாதிரி பேச வந்தாயோ எனக்கு மிகவும் கோபம் வரும். தெரிந்துக் கொள்.''

"ஹா... ஏன் ரேவதி நிறுத்தி விட்டாய். உன் ப்ரசங் கம் கேட்கக் கேட்க காதிற்கு இனிமையாக இருக்கிறது''

''இன்னும் பேசுவேன் ரகு. உன்னுடைய அசட்டுத் தனமான—ஆபாசமான—அநியாயப்பேச்சை சித்தியும் கேட்டுக்கொண்டு நிற்பதைப் பார்த்துதான் மேலே வளர்த்த எண்ணாது நிறுத்தினேன்!''.

ரேவதியின் பின்புறம் லக்ஷ்மி நிற்பதைக்கண்ட ரகு சிறிது கலங்கினனே தவிர, "ரேவதி! உன்னைப்போல நான் கோழையல்ல. எந்த சித்தி வந்தாலும் சரி சுத்தியால் அடித்தாலும் என் நெஞ்சு தளராது அசையாது,'' என்ற வாறு ரேவதியின் அறையைவிட்டு வெளியேறினன். ரேவதியும் படபடவென்று பேசியதால், ஏற்பட்ட களைப்பி ல் அப்படியே கட்டிலில் படுத்தாள்,

தான் பெற்ற மாணிக்கத்தை நினைந்துருகிக் கொண்டே, முத்துவின் வருகையை எதிர்பார்த்து அங்கி ருந்து அகன்று வெளியே வந்தாள் லக்ஷ்மி.

'ஐயோ! என்ன செய்தி கொண்டு வருவானோ முத்து. ரகு எழுதிய கடிதத்தில் எப்படிப்பட்ட பாணங்கள் இருந்து நம்மைத் தாக்கப் போகிறதோ. சதாசிவம் என்ன கூறி அனுப்புவாரோ என்பது போன்ற துயரக் குவியல்களுக் கிடையே அமிழ்ந்திருப்பது போன்ற உணர்ச்சியுடன் கண் களை மூடிக்கொண்டு சுவரில் சாய்ந்தவாறு நின்றிருந்தாள் லக்ஷ்மி.

"அம்மா'' என்ற குரல் கேட்டு அவள் மனம் சிந்தனை உலகிலிருந்து மீண்டு சிட்டாய் பறந்து வந்தது.

முத்து வந்துவிட்டான் என்று ஆவலோடு கண்ணைத் திறந்தாள் லக்ஷ்மி. ஆனல் அவள் எதிரில் முத்துவிற்குப் பதிலாக வாஸுவும், பக்கத்து வீட்டுப் பையனும் நின்றிருந் தார்கள். அவன் கையில் ஒரு தினசரி இருந்தது. இருவர் முகமும் வெளிறிப்போய் கிடந்தது.

"அம்மா! இந்தப் பேப்பரைப் பாரேன் அந்த பையன் பேப்பரில் ஏதோ விஷயம் வந்திருப்பதாய் சொல்கிறான் கேளேன்." என்றுகூறி அழுது விட்டான் வாஸு.

ஏற்கனவே லக்ஷ்மி இருந்த நிலையில் பேப்பரையும் கையில் கொடுத்து விட்டு வாஸு அழத் தொடங்கவே அவளை ஒரு கலக்குக் கலக்கி விட்டது.

"என்ன வாஸு! பேப்பரில்? ஏன் அழுகிறாய்?"

"மாமீ! உங்கள் ரஞ்சன் அமெரிக்காவிற்குப் போயிருக்கிறானே. அந்த ஊரில் ஏதோ விமானம் கவிழ்ந்துவிட்டதாம். அதனால் பயந்து இந்த பேப்பரைக் காட்ட தூக்கிக்கொண்டு வந்தோம்."

"என்ன? விமானம்....கவிழ்ந்துவிட்டதா?" என்று லக்ஷ்மி கையிலிருந்த பேப்பரைப் போட்டுவிட்டு யோசனையில் ஆழ்ந்தாள். அதற்குள் அங்கு ரகுவும் அதனைத் தொடர்ந்து சரோஜாவும் வந்தனர். வாஸுவும், அவன் நண்பனும் பயத்துடன் நிற்பதையும், லக்ஷ்மி கல்லாய் உட்கார்ந்திருப்பதையும் பார்த்து "என்னடா வாஸு! பேப்பரை இப்படிக் கொடு பார்க்கலாம்" என்றவாறு அதை வாங்கிப் பிரித்தான் ரகு.

அதற்குள் வாஸு, "அமெரிக்காவில் விமானம் கவிழ்ந்து அநேகர் இறந்து விட்டார்களாம். சரியாகப் படித்துச் சொல்லேன். அந்த விமானத்தில் ரஞ்சனும் இருந்தானோ என்னவோ" என்று விஷயத்தைவிளக்கினான்.

"அட! அதற்கா இப்படி இருக்கிறீர்கள். விமானம் கவிழ்ந்துவிட்டது என்றாலே ரஞ்சன் இறந்துவிடுவானா? அவனுக்கு ஒரு கேடும் வந்துவிடாது".

"இந்த சமயத்தில் கேடு என்றெல்லாம் பேசாதே. நீ சொல்வது போல் ஒரு கேடும் இல்லதிருந்தால் நல்லது.

ரகு! ரஞ்சன் ஊர் போய் சேர்ந்ததும், நியூயார்க்கிலிருந்து கடிதம் வந்து சேர்ந்தது. அதில் அவன் அந்த ஊரைச் சுற்றிப் பார்த்துவிட்டு, தான் படிக்கச் செல்ல வேண்டிய இடத்திற்கு விமானத்திலேயே போகப் போவதாக எழுதியிருந்தான். ரஞ்சன்தான் ஊர் போய் சேர்ந்தாயிற்றே. இப்போது கவிழ்ந்த விமானம் வேறுதான்'' என்றாள் ஒருவித தீர்மானத்துடன்.

“இரு அம்மா அவசரப்படாதே. படித்தபிறகு பேசலாம்' என்ற ரகு தான் படித்த விஷயத்தைக் கூறினான். “அம்மா! இது இந்தியாவிலிருந்து அமெரிக்கா போகும் விமானம் அல்ல. நீ தீர்மானித்தபடி அமெரிக்காவினுள்ளே நிகழ்ந்த ஆபத்துதான். அதில் இளம் வயதுள்ள படிக்கும் மாணவர்கள், இந்தியாவிலிருந்து சென்றவர்களும் உள்பட பலர் இருந்தனராம்; இப்போது என்னம்மா சொல்கிறாய்''

“என்ன! இந்தியாவிலிருந்து சென்றவர்களா?...ஐயோ எனக்கு எழுதியபடி நியூயார்க்கிலிருந்து விமானத்தில் போனானோ? அந்த விமானமாக இருக்குமா இது? அல்லது மாணவர்கள் கூட்டம் எங்காவது உல்லாசப்ரயாணம் போனவர்களோடு போயிருப்பானோ? ஐயோ ஒன்றுமே புரியவில்லையே. அப்படி ஒருகால் ரஞ்சன் இதில் போய் விட்டிருந்தானானால்......?'' அதற்குமேல் அவளால் நினைக்கவே முடியவில்லை.

தடதடவென்று உள்ளே ஓடினாள். ஓடியவள் ரேவதீ" என அலறினாள். பாத்திரங்களை உருட்டியவாறு பதறியடித்துக்கொண்டு ஓடிவந்த ரேவதி "என்ன சித்தீ! ஏன் இப்படி கத்தினாய். என்ன விஷயம்" என்றாள்.

சாவதானமாகக் கையில் பேப்பருடன் ப்ரஸன்னமாகிக் கொண்டிருந்தான் ரகு. அவன் மனதில் துளியாவது பாசமோ, வருத்தமோ ஏற்படாது ஒருவித நிறைவே இருந்தது. வாஸு, சரோஜா, அந்தப் பையன் மூவரும் அங்கேயே நின்றுவிட்டனர். தங்களுக்குள் அவரவர் சந்தேகங்களை நிவர்த்தித்துப் பரிமாறிக் கொண்டனர்.

"சிறிது நேரம் முன்பு, நான்கு வருடம் கழித்து வரப் போகும் ரஞ்சனுக்காக, அவன் சொன்ன பேச்சிற்காக, உன் சுகத்தையும் உதறித் தள்ளி, என்னையும் கேவலமாகப் பேசினாயே. அதன் பலன் உடனே கிடைத்து விட்டது. என்றுமில்லாத அன்பைச் செலுத்தத் தொடங்கினாயே அருமை அண்ணாவிடம். அந்த அண்ணாவின் கதியைப் பார் ரேவதீ! பார்" அவன் பேசிய தோரணையிலிருந்தே தான் ஏதோ மகத்தான காரியத்தை சாதித்து விட்டதாக ஒரு எண்ணமும், பெருமையும் கொந்தளிப்பதை பளிங்கு கண்ணாடி போல் எடுத்துக் காட்டியது.

அந்த சூழ்நிலையில் ஒன்றுமே புரியவில்லை. புரிந்து கொள்ள சக்தியும் இல்லாது துவண்டுவிட்டாள் ரேவதி. "என்ன ரகு உளறுகிறாய். சித்தீ! விஷயத்தைச் சொல்லேன்." என்றாள் நடுக்கத்துடன்.

"ரேவதீ! அமெரிக்காவில் இளம் மாணவர்கள் அடங்கிய ஒரு விமானம் கவிழ்ந்து விட்டதாம். இந்தியாவிலிருந்து படிக்க வந்தவர்களும் பலர் இருக்கின்றனராம். நம் ரஞ்சனும் இருப்பானோ? அப்படி இருந்தால் அவன் கதி......" என்று கூறி விம்ம ஆரம்பித்துவிட்டாள் லக்ஷ்மி.

"என்ன விமானமா? ஐயோ ரஞ்சனா?" என்ற இரு வார்த்தைகளுக்குமேல் ஒரு வார்த்தையும் ரேவதியிடமிருந்து வெளி வரவில்லை.

"எனக்கு எப்போதோ தெரியும். இங்கிருந்து போன விமானத்திலேயே க்ளோஸ் ஆகி இருக்கவேண்டும். பதிலாக அங்கு போய் காலேஜில் சேர்ந்ததும் அந்த மாணவர்களோடு புறப்பட்டிருப்பான் என்றுதான் தோன்றுகிறது. 'டும்' போட்டுவிட்டான். இங்கிருந்து எடுத்துச் சென்ற பணமெல்லாம் கரைய வேண்டாமா? அவன் படிக்கவா சென்றான். ஊர் சுற்றதான். எந்த வெள்ளைக்காரியோடு போனானோ கவிழ்ந்தான். ரேவதீ! முன்யோசனையுடன் உன் நன்மைக்காக பாடுபட்ட என்னை உதாசீனம் செய்தாயே உடனே பலன்" என்று கும்மாளமடித்தான்

"சீ ரகு! என்ன கல் நெஞ்சனுக இருந்தாலும் கூடப் பிறந்த பாசம்கூட இல்லாத மிருகமா நீ? இப்படியெல்லாம் பேசாதே" என்று அடக்கினுள் லக்ஷ்மி. சரோஜாவும் "ரகுவாம்! மூஞ்சியைப் பாரு. நல்ல அண்ணு, ரஞ்சன் அண்ணு சாகவேண்டும் என்று நீதான் ப்ரார்த்தனை செய்து கொண்டிருந்தாயே அது பலித்துவிட்டது. அப்படி இருக்கையில் உனக்கு பாசமேது துக்கமேது. அப்பாவும் நல்ல அண்ணுவும் போய், கெட்டவன் நீ இருக்கிருயே" என்று ஆத்திரத்தால் பொறிந்து தள்ளினுள். அதோடு நில்லாமல் பெரியதாக அழவும் தொடங்கினுள்.

"ஏய் ரகு! தம்பியாக இருந்து இந்த செய்தி கேட்டு கல்லு பிள்ளையார் போல் நிற்கிருய். வேலைக்காரன் முத்து கேட்டால் தன் உயிரையே விட்டுவிடுவான். அம்மா! நான் போய் யாரிடமாவது—சதாசிவ தாத்தா வீட்டிற்காவது போய் விஷயத்தை அறிந்து வரலாமா?"-இப்படி சரோஜா முடுக்கிவிட்ட மிஷினைப்போல் பேசிக்கொண்டே போனுள்.

லக்ஷ்மியும் பேசவில்லை. ரேவதியும் பேசவில்லை. இருவர் மனதிலும் இருவிதமான எண்ண அலைகள் தோன்றி தோன்றி மடிந்து கொண்டிருந்தன.

'அப்பாவும் போயாகிவிட்டது. நம்மிடம் அன்பாயுள்ள, நம்பிக்கைக்குப் பாத்திரமான முத்துவையும், சதாசிவத்தையும் விரோதித்துக் கொண்டுவிட்டோம். ரஞ்சனிடமும் அன்புக்குப் பாத்திரமாகவில்லை. இருந்தாலும் அவன் கூடப் பிறந்த பாசத்தால், கடமையால் நமக்கு நன்மை செய்கிருன். சித்தியை எப்படி நம்புவது? சிறிது முன்பு ரகு பேசிய பேச்சிலிருந்தே அவன்மேல் கசப்பு ஏற்பட்டுவிட்டது. நாம் என்ன தவறு செய்தாலும் சகித்துக் கொள்ளும் ஒரே ஆதரவான ரஞ்சனும் போய்விட்டானே.' இது ரேவதியினுடையது. அவள் ரஞ்சனிடமிருந்து எவ்வளவு ஒதுங்கி இருந்தாலும் இச் செய்தி அவன் கூடப் பிறந்த பாசத்தால், அவளை வதைத்துக்கொண்டிருந்தது.

'ஹூம்...நாம் பெற்ற பிள்ளைதான் அழகாக இருக்கிறது. மூத்தவளின் பிள்ளையாவது நற்பெயர் எடுக்கிறுனே என்று எண்ணியிருந்தால் அதற்கும் பங்கம் வந்துவிட்டதே. ஆள் துணை இல்லாது—அதுவும் இந்த ஊதாரி ரகுவை வைத்துக்கொண்டு இனி என்ன செய்யப் போகிறேன். ரேவதியும் அடங்காப்பிடாரி. சதாசிவத்தையும் இனி நம் வீட்டு படியேறி வரமுடியாதவாறு செய்துவிட்டோம். இது என்ன சோதனை. ஒன்றன்பின் ஒன்ருக நாம் கட்டிய கோட்டைகளெல்லாம் பொடி சூர்ணமாகி வருகிறதே?—இப்படி லக்ஷ்மி நினைத்ததையே நினைத்துக் கொண்டிருந்தாள்.

"இரண்டு உத்தமிகளும் நன்றாக நடிக்கிறீர்களே. இத்தனை நாளாக இல்லாத அன்பு ஏற்பட்டு ஆட்டிவைக்கிறது பாவம்! ஒரு பத்தாம் பசலி ஒழிந்தது. அதற்கு பதிலாக மற்றொன்று தயாராகி விட்டது. இந்த வீட்டில் எப்போதும் ஜோடி குறையவே கூடாது போலிருக்கிறது. அப்பாவும்—ரஞ்சனும், ரஞ்சனும்—அம்மாவும், அம்மாவும்—ரேவதியும். பலே. பித்துக்குளிகள் கெட்டு மண்ணோடு மண்ணாய் போங்கள்" என்ற ரகு அங்கு நின்றிருந்த சரோஜா, வாஸு எல்லோரையும் விலக்கித் தள்ளிக் கொண்டே போனவன், தனக்கு வேண்டிய சந்தோஷச் செய்தி கிடைத்துவிட்ட பூரிப்பில் உல்லாசமாகக் காரில் எங்கோ புறப்பட்டான்.

அவன் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் ஒன்றும் தெரியாத கள்ளங்கபடமற்ற முத்து அமைதியாக வீட்டையடைந்தான். வாயிலிலேயே இருந்த 'நியூஸ்புலடீன்', "முத்து! பாவி ரகுவின் இஷ்டப்படி ரஞ்சனுக்கு ஆபத்து வந்துவிட்டது மாணவர்களே சென்றுகொண்டிருந்த ஒரு விமானம் அமெரிக்காவில் கவிழ்ந்து விட்டதாம். ரஞ்சனும் அதில் இருப்பானோ என்று அம்மா அழுகிறாள். சீக்கிரம் உள்ளே போ" என்ற இடியைத் தூக்கிப் போட்டாள்.

தீயை மிதித்தவன் போல் "ஹா" என்ற முத்து வேறு பேச்சே பேசாது தடால் என்று சாய்ந்துவிட்டான்.

சரோஜாவுக்கு குலை நடுக்கம் எடுத்துவிட்டது. ஏன் நாம் கூறினோம் என்றாகி, வேறு என்ன செய்வது என்பதும் புரியாது, "அம்மா ஐயோ இங்கே ஓடிவாயேன்" என்று கூக்குரலிட்டாள்.

லக்ஷ்மியும், ரேவதியும் பதறியவாறு ஓடிவந்தனர். அங்கு முத்து விழுந்து கிடப்பதையும், சரோஜா கிலி பிடித்து நிற்பதையும் அறிந்து ஒருவாறு விஷயத்தைப் புரிந்து கொண்டார்கள். அவர்கள் கேள்வி கேட்கும் முன்பே "அம்மா என்னை அடிக்காதேம்மா. விஷயத்தை முத்துவிடம் சொன்னேன். அதனால்தான் அவன் இப்படி.......என்று இழுத்தாள்.

"ஹூம். ரேவதி! பார்த்தாயா ரஞ்சனிடம் நமக்கில்லாத அன்பு முத்துவிற்கு எவ்வளவு இருக்கிறது. நாம் ஒருவேளை அந்த விமானத்தில் ரஞ்சனும் இருப்பானோ என்று சந்தேகப்பட்டு கலங்கும் போதே இவன் இப்படி விழுந்து விட்டானே. ஏற்கனவே உள்ள கவலையோடு, இவனை எப்படி தெளிவிப்பது என்பது வேறு சேர்ந்துவிட்டதே. வள்ளி, வேலன் கூட இல்லையே. என்ன செய்வது ரேவதி"

"நீ இரு சித்தி," என்ற ரேவதி உள்ளே சென்று தண்ணீர் எடுத்துவந்து "வாஸு! இதை இவன் முகத்தில் தெளி" என்றாள்.

தண்ணீர் தெளித்த சிறிது நேரத்திற் கெல்லாம் மூர்ச்சை தெளிந்து கண்ணைத் திறந்த முத்து பக்கத்தில், லக்ஷ்மி, ரேவதி, குழந்தைகள் எல்லோரும் நிற்பதைக் கண்டு அலறியவாறு எழுந்தான்.

"ஏன் முத்து! அப்படி அலறுகிறாய்? நாங்கள் என்ன சொல்லி விடுவோம். சிறிது நேரம் இப்படி உட்கார்"

"என் அலறல் என்னம்மா? குழந்தை சொன்ன செய்திதான் எல்லோரையும் அலற வைத்துவிட்டதே. ஏம்மா அது நிசமா?" என்றான். அவன் ஏதோ பேசினனே தவிர, ஒரு வார்த்தையும், அவன் சுய உணர்வோடு வர வில்லை.

"என் தலைவிதிதான் முத்து எல்லோரையும் ஆட்டி வைக்கிறது. எனக்கு ஒரு வழியும் புரியவில்லை. நீதான் ஏதாவது சொல்லேன்"

"அமெரிக்காக்கு தந்தி அடிச்சு கேக்கலாமே. ரகு இல்லீங்களா"



"ரகுவைச் சொல். அவனுக்கு விஷயம் தெரிந்தும், இத்தனை நேரம் இருந்தவன் இப்போது வெளியே போய் விட்டான். அவனுக்கு அவ்வளவு அக்கரை ஏது? நான் வீட்டைவிட்டு வரும் நிலையிலிருந்தால் வந்துவிடுவேன். உன்னைதான் ச்ரமப்படுத்த வேண்டியிருக்கிறது"

"சரிம்மா. நான் சதாசிவ ஐயா வீட்டுக்குப் போயி வழி செய்யறேன். நீங்க கவலைப் படாதேங்கோம்மா. இதுபோய் ஒரு ச்ரமமா? எனக்கு இருக்கும் கவலையி லும், ஆத்திரத்திலும், சதாசிவ ஐயா வீடு என்ன? அமெ ரிக்காவுக்கே போயிட்டு வந்துடுவேன்" என்றவாறு எதிரில் ஆள்வருவது கூட தெரியாது தலை தெறிக்க ஓடினன்.

ரேவதியின் மனதை கவலையும், பயமும் சல்லடைப் போட்டு சலித்துக் கொண்டிருந்தன. அவளால் அங்கு உட்காரவே முடியாது முள் குத்துவது போல் தத்தளித்தாள். எழுந்திருந்தவள் நேராகத் தன் அறைக் குச் சென்று, அங்கு மாட்டப்பட்டிருந்த தன் தாயாரின் படத்தடியில் குத்துவிளக்கை ஏற்றிவைத்துவிட்டு, கண்ணை மூடியவாறு, அங்கு படுத்து ஏதேதோ தன் மனம் போன வாறு வேண்ட ஆரம்பித்தாள்.

"அம்மா! நீதான் என்னையும் ரஞ்சனையும் சிறுபொழு தேவிட்டுபிரிந்து, கவலையில்லாமல் சென்றுவிட்டாய். ஆனல் நாங்கள்—நாங்கள் இல்லை, நான் ஒரு கவலையும் இல்லாமல் டாம்பீகமாக வாழ்க்கையைக் கடத்திக் கொண்டிருந்தேன். எனக்கிருந்த திமிறில் எல்லோரையும் உதாசீனம் செய் தேன். அதற்குப் பலன் இப்போது அனுபவிக்கிறேன். அம்மா! நீயும், அப்பாவும்தான் தெய்வமாயிருந்து எனக் காக ரஞ்சனை ஒரு ஆபத்தும் அணுகாது காப்பாற்ற வேண்டும். நான் அவனை செய்த பரிபவத்திற்கு எனக் காக என்று வேண்டுவதுகூட அவமானம்தான். ஆனல் நான் இந்த சமயத்தில் என் தவறுகளை எல்லாம் உணர்ந்து வருந்துகிறேன். இனியாவது எனக்கு ஸ்திரமான நல்ல புத்தியைக் கொடு. அம்மா! நல்லச் செய்தியை கேட்கும் படி செய். உன்னைதான் நம்பியுள்ளேன்".

இந்த சமயத்தில் பூனைபோல் ஓசை செய்யாமல் அங்கு வந்த சரோஜா முகவாய் கட்டைமேல் விரல் வைத்து அதி சயித்தாள். பின்னல் காலடி ஓசை கேட்பதைக் கூட அறியாது ரேவதி அவ்வளவு பக்தி ச்ரத்தை உள்ளவளாக மாறியிருந்தாள்.

'ஹூம். இனி நம் வீட்டைப்பற்றி கவலையில்லை. அம்மாவும் மாறிக்கொண்டே வருகிறாள். சிறிது நேரம் முன்பு வரை ரஞ்சனை சபித்துக் கொண்டிருந்த ரேவதி இப்போது தன் அம்மாவின் படத்திற்கு மாலைபோட்டு, விளக்கேற்றி வைத்து வணக்குகிறாள். கடவுளே! அப்பாவைதான் கொண்டுபோய் விட்டாய். இவர்களுக்காவது நல்ல புத்தியைக் கொடுக்கிறாயே அதுவே போதும். அதுபோல் ரஞ்சனையும் காப்பாற்றிவிடு.' என்று மனதிற்குள்ளேயே துதித்தவாறு வெளியே சென்று முத்துவின் வருகைக்காக காத்திருந்தாள் சரோஜா.

காந்தி படத்தடியில் கீதைபடித்துக்கொடிருந்த சதாசிவம் காலடி ஓசைகேட்டு திரும்பி, "என்ன முத்து! இப்போதுதான் வந்துபோனாய். மறுபடியும் ஏன் வந்தாய்" என்றவாறு எழுந்தார்.

முத்துவிற்கு மூச்சு வாங்குவதையும், அவன் முகம் வாடியிருப்பதையும் கண்ணுற்றவர், "முத்து! ஏன் ஒரு மாதிரியாக... என்று வார்த்தையை முடிக்குமுன் "எசமான்! நிற்காதீங்க. இப்படி ரவநேரம் உட்காருங்க. விசயத்தை சொல்றேன். அமெரிக்காவிலே படிக்கிற பசங்க இருந்த ஒரு விமானம் விழுந்துட்டுதுங்களாம். நம் ஊரிலேருந்து படிக்கப்போனவங்க கூட அதிலே... நம்ப ரஞ்சனும் இருக்குமோன்னு வீட்டுலே அம்மால்லாம் பயப்படுகிறாங்க எனக்கு ஒண்ணுமே புரியல்லீங்க எசமான். ஏதாவது வழி செய்யுங்க'' என்று வார்த்தைகளைக் குளறிகொட்டினான்.

"என்ன அப்படியா?... முத்து ஒன்றும் இருக்காது பயப்படாதே. நம் ரஞ்சன் அம்மாதிரியெல்லாம் படிப்பை விட்டு விட்டு எங்கும் சுற்றமாட்டான். அவன் இத்தனை நாளுக்கு காலேஜில் சேர்ந்திருப்பான். நான் விசாரிக்கிறேன்" என்றவாறு இந்த செய்தியை குறிப்பிட்டிருந்த பேப்பரைப் பிரித்துப் பார்த்தார்.

"ஐயா! தந்தியான அடிங்கோ. இல்லாட்டி ஏபிலோ, கேபிலோ என்னவோ சொல்றாங்களே அதிலேயாவது... தெரிஞ்சிக்கலாம் இல்லீங்களா."

கவலை தோய்ந்த முகத்துடன் இருந்த சதாசிவம் எதற்குமே பதில் பேசவில்லை. தன் மனதில் ஏதோ திட்டமிட்டுக் கொண்டவாறு வாயிலை நோக்கி நடந்தார்.

அப்போது எதிரில் நடுத்தர வயதுள்ள ஒரு மனிதர் மூச்சு துரத்த ஓடிவந்தார். "மிஸ்டர் சதாசிவம்! எங்கே போய்கொண்டிருக்கிறீர்கள். பேப்பரில் வந்திருக்கும் செய்தி அறிந்து நீங்கள் கவலைப்படப்போகிறீர்களே என்று ஓடிவந்தேன்'' என்று கூறி நிறுத்தினார்.

பேப்பர் என்றசொல் முத்துவின் காதிலும் விழுந்தது. உடனே அவனும் இவர்களிருந்த இடத்தை அடைந்தான். இவனைப்பார்த்ததும், "முத்து! உங்கள் ஐயாவிற்கு ஒன்று மில்லை. கவலையைத்தள்ளுகிறே" என்றார் வந்தவர்.

இந்த வாசகத்தைக் கேட்டபிறகுதான் சதாசிவத்தின் முகக்குறிகள் மாறின, அதைத்தொடர்ந்து "நிஜமாகவா? உங்களுக்கு எப்படி அமெரிக்காவிலுள்ள விஷயம் இவ்வளவு சீக்கிரம் தெரிந்தது?'! என்றார்.

"என் எதிர்வீட்டில் ஒரு பையன் அமெரிக்காவிற்குப் போயிருக்கின்றான் மூன்று வருடமாகிறது. அவர்களும் கவலையாய் இருந்தபோதுதான் அங்கிருந்து இவர்களுக்குச் செய்திவந்தது. அதில், 'கவிழ்ந்த விமானத்தில் உங்கள் மகனும் இருந்தான். ஆனல் அவன் உயிருக்கு ஆபத்தில்லை சிறு காயங்களோடு தப்பிக்கொண்டான். பாட விஷயமாக மாணவர்களை ஊர்விட்டு அழைத்துச் செல்லும் போது ஏற்பட்ட விபத்து இது. கவலைவேண்டாம்' என

இருந்தது. மேலும், இந்தியாவிலிருந்து சென்றவர்களில் இருவர்தான் அந்த விமானத்தில் இருந்தனராம். ஒருவன் இவன், மற்றொருவன் முஸ்லீம். அதனல் அதில் ரஞ்சன் இல்லை என்பது ஊர்ஜிதமாகிவிட்டது. ரஞ்சன் இருக்கும் இடத்திற்கும் இந்தபையன் படிக்கும் இடத்திற்கும் சம்மந்தமே இல்லை. இவன் சென்று மூன்று வருஷமானதால் அழைத்துச் சென்றிருக்கிறார்கள். ஆனல் ரஞ்சன் இப்போது போனவன்தானே" என்று விஷயத்தை விளக்கினர்.

இதைக் கேட்டதும் சதாசிவம் அமைதியாக முத்துவின் பக்கம் திரும்பினர். ஆனல் முத்துவோ. யாரையும் பார்க்காது "அப்ப... எங்க வவுத்திலே பாலைக் கறந்தாரு" என்றவாறு வீட்டை நோக்கிப்பறந்தான். சந்தோஷச் செய்தி கிடைத்ததும் ஏற்பட்ட மகிழ்ச்சியில் சதாசிவத்திடம் சொல்லிக் கொள்ளவும் மறந்து விட்டான்.

முத்து கண்பார்வையிலிருந்து மறையும்வரை இருவரும் அவனையே பார்த்தவாறு நின்றிருந்தனர். பிறகு பெருமூச்சுவிட்டுக்கொண்டே "சார். ரஞ்சனிடம் மட்டும் முத்துவிற்கு என்னவோ இவ்வளவு ப்ரியம். இத்தனை நேரம் துடிதுடித்தான். நீங்கள் இவ்விஷயத்தைக் கூறியதும் எப்படி ஓடுகிறான் பாருங்கள்" என்றார் சதாசிவம். இவ்வாறு சிறிதுநேரம் பேசி அளவளாவியபின் வந்தவர் விடை பெற்றார்.

வாயிலிலேயே நின்றிருந்த சரோஜாவும், வாஸுவும் "முத்து! ஏன் உடனே வந்துவிட்டாய், என்ன விஷயம்" என்றும் "ஹை. முத்து சிரித்துகொண்டுதான் வருகிறான். அதனால் பயமில்லை" என்றும் தாங்களே கேள்வி கேட்டு விடையும் கூறிக்கொண்டனர்.

இதைப்பார்த்ததும் முத்துவிற்கு சிரிப்புதான் வந்தது, சிரித்தவாறு இருவரையும் கட்டிக்கொண்டு "கண்ணு குட்டிகளா! கெட்டிக்காரங்கம்மா நீங்க. ரஞ்சனுக்கு ஒரு ஆபத்தும் இல்லையாம் அவரைப்போலவே நீங்களும் நல்லா படிக்கணும்" என்று ஏதோ கூறிக்கொண்டிருந்தான்.

ஆனால் சரோஜாவோ, ரஞ்சனுக்கு ஆபத்தில்லை என்ற சொற்களைக் கேட்டதுதான் தாமதம், முத்துவின் பிடியிலிருந்து திமிறிக்கொண்டு ஒரே ஓட்டம்பிடித்தாள். ஓடியவள் நேராக லக்ஷ்மி, ரேவதியின் எதிரில்தான் போய் நின்றாள்.

மேலும், "ரகுவின் ஆசைப்போச்சே, என் ஆசை ஜெய்ச்சுதே" என்ற வார்த்தைகளை ராகமாக இழுத்து, அபிநயம் பிடித்து குதித்தாள். லக்ஷ்மிக்கும் ரேவதிக்கும் ஒன்றும் புரியவில்லை. அதனால் லக்ஷ்மி "சரோ! நீ கூட அசடா? நாம் இம்மாதிரி துக்கமாக இருக்கையில், இப்படி பாடி, ஆடலாமா? வாசலில்போய் முத்து வருகிறானபார்" என்றாள் சற்று கடுமையுடனும், நல்லதனமாகவும்.

"அம்மா! உனக்கு மட்டும்தான் வருத்தமோ. இத்தனை நாள் நீயும், ரேவதியும் ரஞ்சன் அண்ணாவை வைது திட்டிவிட்டு, இப்போது கவலைப்படுகிறீர்கள். ஆனால் நானும், வாஸுவும் எப்போதும் ரஞ்சனிடம் ஆசையாய் இருப்போம் தெரிந்துக்கொள் ஹூக்கும்" என்று லக்ஷ்மியையே மட்டம் தட்டி சவால் விட்டாள்.

தங்கள் தவறைதானே குழந்தை சொல்லுகிறது என்று இருவரும் இது குறித்து வாயைத் திறக்கவேயில்லை. மறுபடியும், "சரோ! போய் பாரம்மா வாசலில்" என்னும் போதே வாஸுவோடு முத்து வந்து கொண்டிருந்தான். அவனைப் பார்த்த சரோஜா மறுபடியும் "முத்து! நான் ஒரு பாட்டு பாடுகிறேன் பார். ரகுவின் ஆசை போச்சே. என்

ஆசை ஜெயிச்சுதே'. முத்து! இது சரிதானே அம்மா கோபிக்கிறாள்" என்று கொஞ்சினாள்.

"ரொம்ப சரிம்மா. அம்மாவுக்கு விசயம் சொல்லிபுட்டையா?"

"என்ன விஷயம் முத்து! ஒன்றும் சொல்லவில்லையே. சதாசிவம் என்ன சொன்னார். ரஞ்சன் கதி என்ன வாயிற்று?" என்ற கேள்விகள் தானாகவே எழுந்தன.

"என்ன? சரோ சொல்லலியா. ஐயோ அது சொல்லியிருக்கும்னு நான் மெதுவாக வந்தேனே. அம்மா! நம்ப ரஞ்சன் ஐயா நாம் பண்ண புண்ணியத்திலே ஒரு குறையும் இல்லாது இருக்கார். நானும், சதாசிவ ஐயாவும் புறப்படறத்துக் குள்ளே ஒருவர் வந்து விசயம் சொன்னார். ரஞ்சன் இருக்கிற ஊருக்கும், இதுக்கும் சம்மந்தமேயில்லையாம். கவிழ்ந்த விமானத்திலே மூணு வருஷம் படிச்சவங்கதான் இருந்தாங்களாம். இவ்வளோதான் கேட்டுகிட்டேன். உடனே ஓட்டம் எடுத்தேன். நமக்கு வேண்டியது இதுதானுங்களே" என்று முடித்தான்.

ரேவதியும் லக்ஷ்மியும் ஒரே சமயத்தில் "அப்பாடி" என்று தங்கள், பயத்தையும் கவலையையும் விடுதலை செய்தனர். ரேவதியும் தன் அறைக்குச் சென்றாள். லக்ஷ்மி தன் களைப்பை ஆற்றிக்கொள்ள உட்கார்ந்துகொண்டாள்.

சுவரோரமாக நின்றிருந்த முத்துவும் ஏதோ யோசித்துக் கொண்டிருந்தான். திடீரென்று ஞாபகம் வந்தவள் போல் "முத்து! உன்னிடம் அப்போது சொல்லி அனுப்பினேனே, இந்த கலவரத்தில் அதைப்பற்றி மறந்தே விட்டேன். என்ன சொன்னார் அவர்?" என்று கேட்டாள் லக்ஷ்மி.

தன் மடியிலிருந்து இரு கடிதங்களை வெளியே எடுத்து அதை லக்ஷ்மியிடம் நீட்டினான். பிறகு "அம்மா! ரகு எழுதிய கடுதாசியையும், கொடுத்திருக்கார். படிச்சு பாருங்கோ" என்றான் விநயமாக.

முதலில் சதாசிவத்தின் கடிதத்தைப் பிரித்து, அதைப் படிக்கத் தொடங்கினாள் லக்ஷ்மி.

"லக்ஷ்மிக்கு,

ஆசீர்வாதம். ரஞ்சனைப் பேரனாக நினைத்திருப்பது போல், உன்னை நான் என் பெண்ணாகதான் பாவிக்கிறேன். அப்படிதான் கடிதமும் எழுதுகிறேன். நீ முத்துவிடம் கடிதம்பற்றி சொல்லி அனுப்பிய விஷயத்தை யறிந்து நான்

அதிர்ச்சி அடையவே இல்லை. நான் இப்படி கூறுவது கேட்டு நீ வியப்படையலாம். ரகு இரண்டு கெட்டான் பிள்ளை. வயதானால் சரியாகி விடுவான் கவலைப்படாதே. ஆனாலும் அவனை மிரட்டித்தான் வைக்க வேண்டும். ரகு எழுதிய கடிதத்தையும் அனுப்பியிருக்கிறேன் படித்துப் பார். என்னை எப்படி எழுதினாலும் நான் ரஞ்சனுக்காக எதையும் பொறுத்துக் கொள்வேன் ஆனால் இந்த வித்தையை பிறரிடம் காட்டினால் ஆபத்தில்தான் போய் முடியும். ரகு கடிதத்தில் கேட்டிருக்கும் கேள்விகளுக் கெல்லாம் விடை கூறுவதென்பது முடியாத காரியம். அவைகளுக்கு விளக்கம் கூறுவதும் இயலாததே. ரகுவின் செய்கையைப் பற்றியும், அவன் குணாதிசயங்களையும் கூறி உன் அளிந்த மனத்தை புண்ணாய்வேகச்செய்ய நான் கருதவில்லை. ஆகையால் இதோடு கடிதத்தை முடிக்கலாம் என நினைக்கிறேன். உனக்கு எந்த நிமிடம், எந்த உதவி தேவையோ, ஏதாவது கலந்துசெய்ய வேண்டிய காரியமோ ஏற்பட்டால் நம் முத்துவிடம் சொல்லி அனுப்பு. நான் தகுந்த ஏற்பாடு செய்து ஒத்துழைப்பேன். கடவுள் துணை.

சதாசிவம்.

கடிதத்தைப் படித்துவிட்டு நிம்மதியான பெருமூச்சுடன் முத்துவைப் பார்த்தாள். பிறகு "முத்தூ என்ன இருந்தாலும் படித்து அனுபவப் பட்டவர்கள் எப்போதும் இப்படித் தான் எழுதுவார்கள். நிறைகுடம் தளம்பாது என்பது ப்ரத்யக்ஷம்." என்றாள். ரகுவின் சொல்லம்புகள் நிறைந்த கடிதம் என்ற பெயருடையதையும் படித்தாள்.

"ஐயோ! இப்படியெல்லாம் எழுதியிருக்கிறானே. என்னிடம் ஒரு வார்த்தைகூட கூறவில்லையே. சதாசிவத்தின் பெருந்தன்மையை என்னென்பது? மலையளவு பாவத்தில் கடுகளவு புண்ணியம் என்பது போல் நான் செய்துள்ள கடுகளவு புண்ணியத்தால் ரஞ்சனாவது பிழைத்தானே அதுவே போதும். முத்தூ! இவ்வளவு பெரியவர் இப்படி கடிதம் எழுதியிருப்பதற்கு நான் சரியான நிலையில் இருந்தால் நேரே வந்து மன்னிப்பு கேட்கவேண்டும். அந்த காரியம் முடியாதாகையால் பதில் கடிதமாவது பிறகு எழுதி தருகிறேன்"

"அதெல்லாம் எதுக்குங்க. இதையெல்லாம் அவர் எதிர்பார்க்க மாட்டாருங்க"

"இல்லாவிட்டால் மரியாதை என்பது ஒன்று இல்லையா முத்து?"

இவ்வாறு சம்பாஷணை நடந்து கொண்டிருந்தது. எல்லோருக்கும் தாங்கமுடியாத துக்கமேற்பட்டால் தான் பேசாதவர்களாயிருந்தாலும், அவர்களோடு சரளமாய் பழக ஆரம்பித்து விடுவார்கள். அதே நிலையில்தான் லக்ஷ்மி, முத்துவோடும் ரேவதியோடும் பழகுகிருள். இந்த குணமே நிலைக்குமா?

நாம் யாராவது ஒருவரைக் குறித்து இவன் இந்த சமயத்தில் வராது இருக்கவேண்டுமே என்று நினைப்போம். ஆனல் அந்த குறிப்பிட்ட நபர் சரியாக வந்து நிற்பார். அப்போது நாம் 'தெனலிராமன் மாதிரி வந்து நிற்கிருன் பார்' என்போம். அதேபோல், இந்த சமயத்தில் ரகு நுழைந்தான் இவர்கள் பேச்சுக்கிடையே.

"நல்முத்து! என்ன விலை. கொஞ்சம் கொடு ரேவதிக்கு வளை செய்வோம். என்ன முத்துவோடு ரகஸ்ய சம்பாஷணை நடைபெறுகிறது? சொல்லம்மா விஷயத்தை" இப்படிக் கூறிக்கொண்டே முத்துவை அலட்சியமாகப் பார்த்தான். அவன் கடைக் கண் பார்வையில் லக்ஷ்மியின் கையிலிருந்த கடிதங்களும் தவறுது விழுந்தன.

"ரகு! நீ கடிதம் எழுதிய விஷயத்தைக் கூறமாட்டேன் என்ருயே. உன் கையெழுத்தால் உருவான அக்கடிதம் இதோ பார் என் கையில். அவர் பதில் எழுதியிருக்கும் கடிதத்தை வாசி. எவ்வளவு படித்து, கண்யமாக இருக்கும் பெரியவர் எப்படி எழுதியிருக்கிருர் என்பதை படி ரகு படி" என்றவாறு சதாசிவத்தின் கடிதத்தைக் கொடுத்தாள்.

அதில் மேலாக் கண்ணேட்டம் விட்ட ரகு "அவரிடம் உதவியோ தேவையோ, கேட்க வேண்டுமா? ஹூம் முத்துவிடம் சொல்லி அனுப்ப அவன் என்ன கடிதத்திற்கு பதிலாக ஏற்பட்ட மனிதனு?'—மறு விநாடி அக்கடிதம் சுக்கல் நூருகி காற்றில் பறக்கத் தொடங்கியது.

"பாவி! அவரது கடிதத்தை ஜாக்கிரதையாகக் காப்பாற்ற வேண்டும் என்று நினைத்தேனே, கிழித்துவிட்டாயே. உன்னை அடக்க யாரும் இல்லையா? முத்து! இதைப் பிடி இந்த கடிதமாவது அவர் கையில் சேரட்டும். இந்த ராக்ஷஸன் அதையும் கிழித்துவிடுவான். நீ போய்விடு இதையும் கிழித்துவிட்டால் என்ன செய்வது" என்ற பயத்தால் அவனிடம் கொடுதது அங்கிருந்து விரட்டினுள்.

"உன்னிடமிருந்தால் வாங்குவேன். அவனிடமிருந்தால் முடியாது. ஏன்? அவன் பெரிய பயில்வானு? எவனும்

என் எதிரில் நிற்க முடியாது. ஏய் முத்து! மரியாதையாக வைத்துவிட்டு, சாதுவாகப் போ"

"வேண்டாமுங்க. அம்மா எடுத்துகிணு போகச் சொல்லச்சே நான் கொடுக்கமாட்டேன். நீங்க எழுதின கடுதாசி தானே அதில் என்ன புதிய விஷயம் இருக்கப்போகிறது" என்று கடிதத்தை துணியில் சுற்றி மடியில் வைத்து கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

"இந்த அதிகப்ரசங்கி வார்த்தையெல்லாம் என்னிடம் நடக்காது. பொடியாக்கித் தள்ளிவிடுவேன். ஹூம். நீட்டு..."

"ஏங்க வீணு கலாட்டா செய்றீங்க. ஒரு விஷயம் உங்களுக்குத் தெரியுங்களா. ஒரு நல்ல செய்தி—ரஞ்சன் அந்த விமானத்திலே போகலேன்னும்—சௌக்கியமா இருக்கார்னும் தெரிஞ்சுவிட்டதுங்க" என்று அவனை வேறு பேச்சில் திருப்ப முயன்றான்.

"முத்து! உனக்கு இவனோடு என்ன பேச்சு நீ போ"—என்றாள் நடுக்கத்துடன்.

"எவன் இருந்தால் என்ன? இல்லாவிட்டால் எனக்கென்ன? அந்த ரஞ்சன் எங்காவது தொலையட்டும். சரி இதுதான் கடைசீ தடவை. மரியாதையாக எடு வெளியே. நீ கொடுக்காது நடக்கிறாயா? இதோ பார்" என்ற வார்த்தைகளைத் தொடர்ந்து 'பளார்' என்ற ஓசையும் எழுந்தது. அவ்வொலிக்கு இறையானது முத்துவின் கன்னம்தான்.

அதே விநாடியில் முத்துவிடமிருந்து கடிதமும் பறிக்கப்பட்டது, லக்ஷ்மியின் அலறலும் எழுந்தது. எல்லாவற்றிற்கும் மேற்பட்டு, ரகுவின் ராக்ஷஸ ஒலியும் வானைப் பிளந்தது. உடனே ரகுவின் கால்களும் ஓட்டம் எடுத்தன.

லக்ஷ்மி அலறலோடு ரகு ஓடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தாளே தவிர முத்துவை கவனிக்க வில்லை. முத்துவின் குரல் கேட்காது இருக்கவே அவள் கவனம் அப்பக்கம் திரும்பவில்லை.

"முத்து! அடிபலமா?" என்றவாறு திரும்பியவள் முத்து மூச்சு பேச்சின்றி விழுந்திருப்பதையும், அவன் வாயிலிருந்து ரத்தம் வழிவதையும் பார்த்ததும், அவளது நாடியே அடங்கிவிட்டது. கத்த வாயெடுக்கிறாளே தவிர வார்த்தை வெளிவரவே இல்லை. பிறகு ஒருவாறு "ஐயோ ரேவதி! ரேவ[illegible]! [illegible]! நான் என்ன செய்வேன். ஓடிவாருங்கள்" என்று கிணத்திலிருந்து பேசுவது போல் கத்தினாள்.

183207

வாழ்க்கையில் ஒரு குறிப்பு

[ஏன் இப்போதெல்லாம் 'வாழ்க்கையில் ஒரு குறிப்பு' வருவதில்லை என்று உங்களுக்குக் கடிதம் எழுதியிருந்ததற்கு, 'பாரதியாரின் வாழ்க்கையில் ஒரு குறிப்பு வருகிறதே, அதனால் இதை நிறுத்திவிட்டோம்' என்று பதில் எழுதினீர்கள். ஆனால் அப்பதில் என் மனதிற்கு த்ருப்தி தருவதாய் இல்லை. இதற்குமுன் வந்துகொண்டிருந்ததைதான் எங்கள் சிநேகிதர்கள் உள்பட மிகவும் விரும்புகிறோம். அதனால் அப்படிப்பட்ட ஒரு உண்மையில் நடந்த சம்பவத்தைக் கீழே எழுதியுள்ளேன்].

நான், கணவர் வேலை நிமித்தம் வடக்கே ஊர் சுற்றுபவர்களில் ஒருத்தி. ஒரு நாள் நான் என் சிநேகிதிகள் புடைசூழ கடைக்குச் சென்றேன். ஒரு கடையில் எனக்குப் பிடித்த சிலவற்றை எடுத்துக்கொண்டு, அக் கடையில் இல்லாதவற்றை வாங்க கூட்டத்தில் இடிபட்டுக் கொண்டு வேறொரு கடைக்குச் சென்றோம்.

அங்கு சென்றதும், கையிலிருந்த பையின் கனம் குறைந்து லேசாகி விட்டதுபோல் ஒரு உணர்ச்சி ஏற்பட்டது. குனிந்து பையைப் பார்த்தேன். 'ஐயய்யோ' என்ற கூச்சல்தான் வெளிவந்தது. என் கையில் பையின் மேல் பாகத்தின் பிடிகளும், சிறிதளவு துணியும்தான் மிச்சம் இருந்தன. பையில் முக்கால் பாகத்தை அப்படியே—அதுவும் அழகாக வெட்டி எடுக்கப் பெற்றிருந்தது. அதிலிருந்த என் சாமான்கள் காலி... இவ்வளவு சாமர்த்தியமாகயாரோ வேலை செய்திருப்பதைப் பார்த்து ஆச்சரியத்தால் சிரிப்பதா? 53 ரூபாய் புடவை, நாலைந்து சட்டைத் துணிகள், 30 ரூபாய் அடங்கிய பர்ஸ் எல்லாம் போய்விட்டதைப் பார்த்து, வீட்டில் என்ன பதில் சொல்வது என்பதை நினைத்து அழுவதா? என்று தெரியவில்லை.

நான் எந்த கடையில் வாங்கினேனோ அதே தெருவிற்கு மறுநாள் சென்றேன். என்ன ஆச்சரியம்! தெருவின் ஒரு மூலையில், சிறிய பையனொருவன், என் சாமான்கள்—ஆமாம் என்புடவையை,—53 ரூபாய் புடவையை "10 ரூபாய்" எடுங்கம்மா எடுங்க" என்று கூவிக் கொண்டிருந்தான்.

நான் அருகில் போய் கவனித்ததில் புடவையின் மடிப்பில் ஒட்டியிருக்கும் விலை எழுதியுள்ள காகிதத்தையும்கூட எடுக்காது இருந்தது. அந்த பையனோடு, நான் வாங்கிய கடைக்குச் சென்றேன். என் புடவை திருட்டுப் போனது அவர்களுக்குத் தெரியுமாதலால், கையுங் களவுமாக அப் பையனைப் பிடித்து போலீஸிலும் ஒப்படைத்தோம். 'என் சாமான்கள் கிடைத்த வரைக்கும் அதிர்ஷ்டம்' என்று நினைத்துக் கொண்டேன்.

விஷயம் ஒன்றும் ப்ரமாதமில்லையானாலும் எதற்கு இதை எழுதினேன் என்றால், என்போன்ற சகோதரிகள் என்னைப்போன்று அஜாக்கிரதையாக பையை முதுகு புறமும் பக்க வாட்டத்திலும் தொங்கவிட்டு, ஏமாற வேண்டாம் என்பதற்காகத்தான்.

என் சமர்த்தைப் பார்த்து சிரிக்காதீர்கள்! S.N. கிரிஜா.

Jaganmohini (April 1957) Regd. No. M. 2210

பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்

அருணை

சர்ப்பாசயரோக நிவாரணி

ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ் 17.

AYURVEDASRAMAM (PRIVATE) LTD.
MADRAS-17.

வை. மு. கோ. நாவல்கள்

ரூ. 4-8
வைதேகி (2 பாகம்)
ரூ. 4.
சாந்தியின் சிகரம்
ரூ. 3.
நிர்மலநீரோடை
ரூ. 2-8
மலர்ந்த இதழ்
வானக்குயில்
மதுரகீதம்
ரூ. 2-4
ஞானதீபம்

ரூ. 2.
சந்தோஷ மலர்
கருணாலயம்
வாத்ஸல்யம்
அமுதமொழி
தெய்வீக ஒளி
பாதாஞ்சலி
புனிதபவனம்
குணக் குன்று
ஜீவநாடி

ரூ. 1-12
அமுதைப்பெண்
புகழ்மாலை

கலாநிலயம்
சிலாசாசனம்
வீராங்கனை
அமைதியின் அஸ்திவாரம்
கடமையின் எல்லை

ரூ. 1-8
பிரதிபலன்
பவித்திரப்பதுமை
ஓவியப் பரிசு
காலக்கண்ணாடி
ஜெயபேரிகை
நம்பிக்கைப்பாலம்
சுதந்திரப் பறவை
மகிழ்ச்சி உதயம்

ரூ. 1-4
கோபால ரத்னம்
க்ருபாமந்திர்
புதுமைக்கோயில்
வீரவஸந்தா

ரூ. 1-2
அபராதி

ரூ. 1.
வத்ஸகுமார்
ப்ரார்த்தனை

பிரதிக்ஞை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
மனத்தாமரை
தபால் விநோதம்
இனிய முரசு
ஆண்டவனின் அருள்
இந்திரமோஹனா

அணா 12
பக்ஷமாலிகா
ப்ரேமாச்ரமம்
நியாயமழை
அருணோதயம்
மனச்சாட்சி
குலதனம்
கருணை உள்ளம்
சந்திரகலாமாலை
தென்னாட்டு கல்யாண முறைகள்

அணா 8.
உருத்த இதயம்
கான கலா
தூய உள்ளம்
ஸௌபாக்யவதி
ப்ரபஞ்சலீலை
வெற்றிப்பரிசு
ரோஜா மலர்
தைரியலக…

வை. மு. ஸ்ரீ.

உதய சூரியன் 1-4
பெண்மணிக்கனல் 1-0
இருளில் ஒளி 1-4
தியாகபலி 0-13
ஜயந்திசிந்தனைகள் 1-8
கோதாஹ்ருதயம் 0-12

வை.மு. பத்மினி

ரூ. 1-8
ஸ்ரீ க்ருஷ்ணார்ப்பணம்
பாலர் மோகினி
12 சிறு கதைகள் 1-0

சுத்தானந்த பாரதி

காந்தி கீர்த்தனம் 3-8

ப்ர. ப. அண்ணங்கராச்சார்ய ஸ்வாமி

ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாமவுரை 1-0
அபூர்வ ராமாயணம் 1-8

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed & published by V. M. PARTHASARATHY at the JaganMohini Press, 26, Car St, Triplicane, Madras 5.